# திசை

THISAI

திசை 1 | 17-11-1989 வெள்ளிக்கிழமை | விலை : ரூபா 4-00 | முகம் 45


## வரவு செலவுத் திட்டம்

புதிய வரவு செலவுத் திட்டத்தை, நிதியமைச்சரும் பிரதமருமான ஜே. விஜேதுங்க நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார். அதிலுள்ள முக்கிய அம்சங்கள் சில வருமாறு :

* 2000 ரூபாவுக்கு மேற்படாத சம்பளம் பெறும் அரசாங்க ஊழியர்களுக்கு 200 ரூபா சம்பள அதிகரிப்பு. ஓய்வூதியம் பெறுபவருக்கும் இது வழங்கப்படும். ஜனவரியிலிருந்து இது நடைமுறைக்கு வரும்.
* ஆடம்பரப்பொருட்களுக்கும், ஓரளவு ஆடம்பரப் பொருட்களுக்கும் 20 — 40% வரை மொத்த வரி அதிகரிப்பு.

(14 ஆம் பக்கம் பார்க்க)

# இந்தியப் பொதுத் தேர்தல்:

# ஸ்திரமற்ற ஆட்சி தோன்றலாம்

**இந்தியாவில் யார் பதவிக்கு வந்தாலும் ஸ்திரமான அரசையமைப்பது கடினமென அவதானிகள் கருதுகின்றனர். இந்த ஸ்திரமின்மை இந்தியாவின் உள்நாட்டு வெளிநாட்டு அரசியலிலும் பிரதிபலிக்கும் என்றாலும் குறிப்பாக அதன் அண்டை நாட்டுக் கொள்கையில் பெரும ஸ்திரமின்மை தோன்றககூடும் எனத் தெரிகிறது.**

1984 ஆம் ஆண்டுத் தேர்தலில் 4/5 பங்கு. பெரும்பான்மைப் பலத்தைப் பெற்ற இந்திராகொங்கிரஸ், என்றுமில்லாதளவு ஸ்திரம்வாய்ந்ததான அரசை அமைக்க முடிந்தது, அத்தகையஸ்திரத்தைப் பேணுவதற்கு ஜே. ஆர். பாணியில் ராஜீவ் கட்சிதாவாத் தடைச் சட்டத்தைக்கூடக் கொண்டு வந்திருந்தார் என்பது தெரிந்ததே.

தற்போது இந்திரா கொங்கிரசுக்கும் தேசிய முன்னணிக்கும் இடையில் கடும் போட்டி நிலவுவதாகவும், தேசிய முன்னணி பெரும்பான்மை ஆசனங்களைப் பெறக்கூடும் எனவும், அவ்வாறு அது பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்றாலும் தனித்து அதனால் அரசமைக்க முடியாத நிலையே இருக்கும் எனவும், அவதானிகள் கருதுகின்றனர். நிலைமையைப்பார்க்கும்போது யார்தான் வெற்றி பெற்றாலென்ன, ஸ்திரமான அரசை ஒருவராலும் இலகுவில் அமைக்க முடியாதென்பதே, உண்மை. இத்தகைய ஸ்திரமின்மை குறைந்தது இரண்டு ஆண்டுகளாவது இந்திய அரசியலில் நீடிக்கலாம் என்றும், அவ்வாறு மத்திய அரசு ஸ்திரமற்று இருக்குமாயின் இலங்கை சம்பந்தமான அதன் கொள்கையிலும் பெருமளவு ஸ்திரமின்மை இருக்கும் என்றும், அவதானிகள் கருதுகின்றனர்.

## ராஜீவின் தேர்தல் விஞ்ஞாபனம்

இந்திரா கொங்கிரஸால்தான் நாட்டின் ஐக்கியத்தையும் ஒருமைப்பாட்டையும் உருவாக்க முடியும் என்றும், எதிரணி வகுப்பு வாத அணியெனவும், அவர்கள் கொள்கையற்ற அரசியற் சந்தர்ப்பவாதிகளெனவும், கொங்கிரஸ் ஆட்சிதான் நவீன இந்தியாவை உருவாக்கக்கூடிய தெனவும் கொங்கிரஸ் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் கூறுகிறது.

பஞ்சாயத்து ராஜ், ஜவஹர் வேலைவாய்ப்புத்திட்டம், அக்னி ஏவுகணை என்பன கொங்கரஸின் தேர்தல் உத்திகளிற் சில, பஞ்சாயத்து ராஜ் மசோதா தோல்வி அடைந்த போதிலும், மக்கள் கைக்கு அதிகாரம் போவதை எதிர்க்கட்சிகள் விரும்பவில்லை என்ற பிரச்சாரத்தை, கொங்கிரஸ் செய்து வருகிறது. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் படித்த, கிராமப்புற இளைஞர்களைக் கவர்ந்து இழுக்கும் நோக்குடன் அமைக்கப்பட்டது; அக்னி ஏவுகணை ஒரு தேசியக் கவர்ச்சியை உருவாக்கும் நோக்கத்தைக் கொண்டது.

அரச வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் ஆளும் கட்சிக்கு சாதகமாகப் பயன்படுத்தப் படுகின்றன இந்திரா கொங்கிரசின் மீது தீவிர பற்றுமிக்க அதிகாரிகள் இச்சாதனங்களில் பொறுப்புள்ள பதவிகளில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

தேசிய பாதுகாப்பின் பெயரால் எதிர்க்கட்சிகள் வேவு பார்க்கப்பட்டு, அந்த அறிக்கைகளை வேவுத் துறையினர் ராஜீவுக்குக் கையளிக்க, அதனை ராஜீவ் தனது கட்சிக்குச் சாதகமாகப் பயன்படுத்துவதாகக் கூறப்படுகின்றது.

வீதி அமைப்பு, பஸ் நிலைய அமைப்பு, மற்றும் சேவை நிலைய அமைப்புக்கள் என்பவற்றிற்கு நம்பிக்கைமிக்க அரச அதிகாரிகள் நியமிக்கப்பட்டு, இவற்றிற்கான நிர்மாணங்கள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. ஆட்சியில் இருப்பவர் என்ற வகையில், பலவேறு அனுகூலங்களையும் பயன்படுத்தக்கூடிய நிலையில் ராஜீவ் உள்ளார்.

## ரோஹண விஜயவீர சுட்டுக் கொல்லப்பட்டார்

ஜே. வி. பி. (மக்கள் விடுதலை முன்னணி) இயக்கத் தலைவரான ரோஹண விஜயவீரவும் அவரது இயக்கத்தின் முக்கிய மத்திய அரசியல் குழு உறுப்பினருமான எச். பி. ஹேரத் என்பவரும் ஆயுதப்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தின் போது கடந்த திங்கள் காலை மரணமானதாகவும், பாதுகாப்புக் கருதி அவர்கள் இருவரது உடல்களும் தகனம் செய்யப்பட்டதாகவும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் அறிவித்துள்ளார்.

ஆயுதப்படையினர் தமக்குக் கிடைத்த தகவலின்படி கம்பளை - உலப்பனைப் பகுதியில் தேடுதலில் ஈடுபட்டபோதே, இவர் பிடிபட்டார் எனத் தெரிய வருகிறது. இவரோடு இவரது மனைவியும், பிள்ளைகளும் காணப்பட்டனர். கடந்த ஞாயிறு கைது செய்யப்பட்ட இவர் கொழும்பில் ஓர் ஒதுக்குப் புறத்திலுள்ள ஜே. வி. பி. இயக்கத் தலைமையகத்துக்கு கொண்டு செல்லப்பட்டு, அங்கே நிகழ்ந்த அசம்பாவிதத்தின்போதே கொல்லப்பட்டார் எனக் கூறப்படுகிறது.

## கொழும்புச் செய்தி

— யாழ் குருவி —

### எது சரி !

ஜே. வி. பியின் வன்முறைச் செயல்கள் தற்போது கொழும்பைச் சுற்றிய இடங்களிலும், ஏனைய வெளியிடங்களிலும் குறைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இதற்குக் காரணமாக இரண்டுவிதக் கருத்துக்கள் நிலவுகின்றன. ஒன்று, ஜே. வி. பியின் வலுவைமுற்றாக இலங்கை இராணுவம் முறியடித்து விட்டதே இதற்குக் காரணம். இரண்டாவது, அப்பாவிக் கிராமத்து மக்களையும் ஒன்றும் அறியாத கிராமத்து இளைஞர்களையும் அரசபடை கொன்று குவிப்பதால் ஜே. வி. பியினரே தமது தொடர்த் தாக்குதல்களைத் தற்காலிகமாகக் குறைத்துள்ளதாகவும் கூறப்படுகிறது. இதில் எது சரி? ஜே. வி. பியின் தலைவர் ரோஹண விஜயவீரவும் அவரது முக்கிய சகாக்களும் கொல்லப்பட்டு விட்டனர் என்ற அண்மைக் காலச் செய்தி, முதல் காரணத்தையே பலப்படுத்துவதாய் உள்ளது.

### பிரயாணம் பலவிதம்

முன்னர் கொழும்பிலிருந்து தமிழ் இளைஞர்கள் வெளிநாடுகள் சென்றனர். பின்னர் இங்கிருந்து அவர்களுக்கு மணப்பெண்கள் அனுப்பப்பட்டனர். தற்போது வேப்பம்பட்டை, சீரகத்தூள், மல்லித்தூள் போன்ற 'பரியாரிப்புப்' பொருட்களும் அனுப்பப் படுவதாக தபால் வட்டாரங்கள் கூறுகின்றன. அத்தோடு இவற்றின் 'பத்திய' முறை தெரிந்த சித்திமார், மாமிமார் போன்றோரும் கூடவே செல்கின்றனராம் !

### நீ அங்கே, நான் இங்கே

இப்பொழுது அனேகமாக கொழும்பிலுள்ள டெலெக்ஸ் தொடர்பு நிலையங்களில் வெளிநாட்டிலிருந்து கணவன்மாரை விட்டு விட்டு இங்கு திரும்பியுள்ள தமிழ்ப் பெண்களை, அல்லது மனைவிமாரை வெளிநாட்டில் விட்டு இங்கு வந்து விட்டு, மீண்டும் அங்குபோக முடியாது கஷ்டப்படும் ஆண்களைத்தான் காணக்கூடியதாய் உள்ளது. இவர்கள் அடிக்கடி ஒருவரோடொருவர் ரெலெக்ஸ் மூலம் தொடர்பு கொண்ட வண்ணம் உள்ளனர்.

### ஜே.வி.பி.யின் பதிலடி

ரோஹண விஜயவீர கைது செய்யப்பட்ட உலபனைப் பகுதியில், ஜே. வி. பி யினர் 52 பொதுமக்களைக் கொன்று குவித்துள்ளதாக, கொழும்பு பொலிஸ் வட்டாரச் செய்திகள் அறிவிக்கின்றன.

பொதுமக்கள் காட்டிக் கொடுத்ததினாலேயே இது நிகழ்ந்திருக்கலாம் எனக் கூறப்படுகிறது.


## கனடாவில் வேலைவாய்ப்புகள்

| | தொழில்வகை | சம்பளவிபரம் |
|---|---|---|
| 1. | கணக்காளர்கள் | 1170 கனேடியன் டொலர் |
| 2. | கணக்குப்பதிவாளர்கள் | 900 கனேடியன் டொலர் |
| 3. | இரசாயனவியலாளர்கள் | 960 கனேடியன் டொலர் |
| 4. | எழுதுவினைஞர்கள் | 840 கனேடியன் டொலர் |
| 5. | சாரதிகள் | 850 கனேடியன் டொலர் |
| 6. | பொறியியலாளர்கள் | 1340 கனேடியன் டொலர் |
| 7. | எலெக்ரீசியன்கள் | 1110 கனேடியன் டொலர் |
| 8. | போர்மன்கள் | 1020 கனேடியன் டொலர் |
| 9. | தொழிலாளர்கள் | 750 கனேடியன் டொலர் |
| 10. | மெக்கானிக்குகள் | 800 கனேடியன் டொலர் |

நேர்முகப் பரீட்சையின்பின் 3 வருட விசாவுடன் கூடிய தொழில் அனுமதிப்பத்திரம் வழங்கப்படும். முற்பணம் அறவிடப்படமாட்டாது. விண்ணப்பப் படிவங்கட்கும் ஏனைய விபரங்கட்கும் நேரில் தொடர்பு கொள்க.

**AXONT AGENCY**

370, Point Pedro Road,
Anaipanthi,
JAFFNA.

(வீரமாகாளி அம்மன் கோவிலுக்கு அருகாமையில்)


'சற்றடே றிவியூ'வின் சகோதர வாரப் பத்திரிகை

திசை
THISAI

சந்தா விபரங்கள்:
(உள்நாட்டுத் தபாற் கட்டணத்தையும், வெளிநாட்டுத் தபாற் கட்டணத்தையும் உள்ளடக்கியது.)

இலங்கை
ஒரு வருடம்-ரூபா: 225/-
அரைவருடம்-ரூபா: 115/-

இந்தியா
ஒரு வருடம்-ரூபா: 800/-
(இந்திய ரூபா)

சிங்கப்பூர் / மலேசியா
ஒரு வருடம் -
யு.எஸ்.டொலர் 40

ஏனைய நாடுகள்
ஒரு வருடம் -
யு.எஸ்.டொலர் 60

காசோலைகள் அனைத்தும் நியூ ஈரா பப்ளிகேஷன்ஸ் லிமிட்டெட் (New Era Publications Ltd.) என்றே, எழுதப்பட வேண்டும்.

பத்திரிகை விநியோகம், சந்தாப்பணம், விளம்பரம் போன்ற நிர்வாகத் தொடர்பு முகவரி:

118, 4ஆம் குறுக்குத்தெரு,
த. பெ. 122,
யாழ்ப்பாணம்.

# ரோஹண விஜயவீர

ரோஹண விஜயவீரவின் இயற்பெயர் டொன் நந்தசிறி விஜயவீர என்பதாகும். 'டொன் அன்றிஸ் விஜயவீர' என்பவருக்கும், 'நாசி நோனு விக்கிரம குலதோட்ட' எனும் பெண்ணுக்கும் மூத்த மகனாக 1943 ஆம் ஆண்டு யூலை மாதம் 14 ஆம் திகதி தங்காலையில் அவர் பிறந்தார்.

ரோஹணவின் தந்தை அன்றிஸ் விஜயவீர கொம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்தவர். 1947 ஆம் ஆண்டில் பொதுத் தேர்தலில், ஹக்மனைத் தொகுதியில் கொம்யூனிஸ்ட் கட்சி வேட்பாளருக்கு ஆதரவாகப் பிரச்சார வேலையில் தீவிரமாக ஈடுபட்டிருந்தார் இவ்வாறு பிரச்சார வேலைகளில் ஈடுபட்ட வேளை எதிரணியினால் அன்றிஸ் தாக்கப்பட்டு படுகாயமுற்றார். இதன் பின்பு இவர் படுக்கையில் கிடந்து கால்கள் வளங்காத நிலையில் 1965 ஆம் ஆண்டு காலமானார்.

ரோஹணவின் இளமைக் கால வாழ்வு வறுமை நிறைந்ததாக இருந்தது. இவர் 1959 ஆம் ஆண்டு க. பொ. த(சா/த) பரீட்சையில் சித்தியடைந்த போதிலும், வறுமை காரணமாக மேற்படிப்பைத் தொடராது விட்டார். பின்பு கொம்யூனிஸ்ட் கட்சியின் சிபார்சின் பெயரில் 1960 செப்ரெம்பர் மொஸ்கோ பயணமாகி, அங்கு தனது மேற்படிப்பைத் தொடரலானார். மருத்துவத்துறையில் 3 ஆம் ஆண்டுப் பரீட்சையில் சித்தியடைந்த இவர், பீக்கிங் கொம்யூனிஸ அரசியலாற் கவரப்பட்டார். இதனால் இவரது மொஸ்கோ விசா இரத்துச் செய்யப்பட்டு, படிப்பு 1964 ஆம் ஆண்டு இடை நிறுத்தப்பட்டது.

பீக்கிங் சார்பு கொம்யூனிஸ்ட் கட்சியின் வாலிப முன்னணிச் செயலாளராகச் செயற்பட்ட ரோஹண, கட்சித் தலைவர் என். சண்முகதாஸனுடன் முரண்பட்டு, கட்சியிலிருந்து வெளியேறி, 1967ஆம் ஆண்டு ஜனதா விமுக்தி பெரமுனை அமைப்பை ஸ்தாபித்தார்.

1971 ஆம் ஆண்டு ஏப்ரில் கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கியவர் என்றதன் பெயரில், ஆயுட்காலதண்டனை இவருக்கு விதிக்கப்பட்டது. 1977 இல் ஜே. ஆர். பதவிக்கு வந்ததும் ரோஹண விடுதலை செய்யப்பட்டார். பின்பு 1982 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில்போட்டியிட்டுத்தோல்வி அடைந்தார். 1983 யூலை இனப்படுகொலை கலவரத்துக்கு காரணகர்த்தா எனக் குற்றஞ் சாட்டி ஜே ஆர். இவரது கட்சியை தடைசெய்தார். அன்று தொட்டு தலைமறைவாக வாழ்ந்துவந்த ரோஹண, 1987 இலங்கை - இந்திய ஒப்பந்தத்தைத் தொடர்ந்து, தீவிர ஆயுதம் தாங்கிய அரசியலில் ஈடுபட்டுவந்தார். இறுதியாக அரச படையினரால் கைது செய்யப்பட்டு 13/11/89 அன்று அதிகாலை கொல்லப்பட்டார். □

# பிரேமாவும் ஜே. வி. பி. யும்

இலங்கை—இந்திய ஒப்பந்தத்தையும், இந்திய இராணுவம் இலங்கையில் இருப்பதையும் காரணம் காட்டி ஜே. வி. பீ. விரைவாக வளரத் தொடங்கியது. ஜே. வி. பி. யின் தேர்தற் பகிஷ்கரிப்பும் அதற்கான ஆயுதம் தாங்கிய நடவடிக்கைகளும், பிரேமாவின் தேர்தல் வெற்றிக்கு அனுகூலமான நிலைமைகளைத் தேடிக் கொடுத்தன. ஆனால் தற்போது பிரேமாவின் இருப்புக்கு சவாலான நிலையில் வளர்ந்துவந்த விஜயவீர கொல்லப்பட்டமை, பிரேமாவிற்கு மேலும் வெற்றியையே கொடுத்துள்ளது. ஒருவகையில் ஐ. தே. க. வுக்குள் தனக்கிருந்த எதிர்ப்புக்களை பிரேமா சமாளிக்கவும், சுதந்திரக் கட்சியை தேர்தலிற் தோற்கடிக்கவும் விஜயவீரவின் வளர்ச்சி பிரேமாவுக்குச் சாதகமாகவே இருந்தது. ஆனால் மேற்கூறிய இரு சக்திகளையும் பிரேமா வெற்றி கொண்ட பின்பு, விஜயவீரவின் வளர்ச்சி அவருக்குப் பாதகமானதாகவே இருந்தது. இன்றைய நிலையில் விஜயவீரவின் மரணம், பிரேமாவிற்கு ஒரு பெரு வெற்றியேயாகும்.

# ஜே. ஆரும் ஜே. வி. பி. யும்

1971 இல் ஜே. வி. பியின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் பின்னர், எண்பதுகளில் அதன் எழுச்சிக்கு வித்திட்டவர் ஜே. ஆர். என்று அரசியல் அவதானிகள் உறுதியிட்டுக் கூறுகின்றனர்.

ஜே. வி. பி. யினருக்கு மன்னிப்பு வழங்கி, அவர்களை சுதந்திரமாக நாட்டில் இயங்குவதற்கு ஜே. ஆர். ஏன் இடமளித்தார் என்ற கேள்வி, முக்கியமானது.

ஜே. ஆர். ஜே. வி. பியினரைத் தலையெடுக்க வைத்ததின் மூலம், சிறீலங்கா சுதந்திரக்கட்சியை இலங்கை அரசியலில் இருந்து ஒதுக்குவதற்கு வழிவகுத்தார். அவ்வாறே ஜே. வி. பியின் வளர்ச்சி, சிறிமாவோ அம்மையாரின் கட்சியை அனுமதேயமாக்கியது.

ஆனால் அதே நேரத்தில் ஜே. வி. பி. யின் வளர்ச்சி பின்னடிக்கு ஜே. ஆருக்கு இடையூறாக இருந்ததோடு, ஜே. வி. பியை வைத்தே ஜே. ஆரை ஒதுக்குவதற்கு பிரேமாவுக்கு வழி சமைத்துக் கொடுத்தது என்றும், சொல்லப்படுகிறது.

# இந்திய...

(13ஆம் பக்கத் தொடர்ச்சி)

டைத் தவிர, இந்திய லோக் சபைக்கு ஏழு பிரதமர்கள் உத்தரப் பிரதேசத்திலிருந்துதான் தெரிவானார்கள். இம்முறையும் ராஜீவ் காந்தி தெற்கு உத்தரப் பிரதேசத்தில் அமெதி தொகுதியிலும், ஜனதா தள் தலைவர் பெற்குப்பூர்தொகுதியிலும் தேர்தல் களத்தில் போட்டியிடுகிறார்கள். 54௦ நாடாளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட லோக் சபைக்கு உத்தரப் பிரதேசத்திலிருந்து 85 உறுப்பினர் தெரிவு செய்யப்படவுள்ளனர். ராஜீவ் காந்தி - வி. பி. சிங் இவர்களை லோக் சபைக்குத் தெரிவதும், நிராகரிப்பதும் உத்தரப் பிரதேசம் தான்.

இது தவிர, ஆந்திரப் பிரதேசம், கோவா, கர்நாடகம், சிக்கிம், உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் நாடாளுமன்றத்தோடு சட்டசபைக்கும் தேர்தல்கள் நடைபெறவுள்ளன.

பாரதீய ஜனதாக் கட்சித் தலைவர் லால் கிருஷ்ண அத்வானி புது டெல்லியிலும், ஆந்திர முதல்வரும், தேசிய முன்னணித் தலைவருமான என். ரி. ராமராவ் ஆந்திராவில் தொகுதிகளில் — ஹின்பூரிலும், கல்வாக்குத்தியிலும், முன்னாள் கர்நாடக முதலமைச்சர் ராமகிருஷ்ண ஹெக்டே பெங்களூரில் பஸ்வானகுடித் தொகுதியிலும், உன்னிக் கிருஷ்ணன் கேரளாவில் வடகரா தொகுதியிலும் போட்டியிடுகிறார்கள்.

அஸ்ஸாமில் 14 தேர்தல் தொகுதிகளிலும் தேர்தல் இம்முறை நடைபெறவில்லை. கஷ்மீரத்தில் ஸ்ரீநகரில் தேசிய மகாநாட்டுப் பிரதிநிதி முகம்மது சாபி பாத் போட்டியின்றித் தெரிவு செய்யப்பட்டுள்ளார். □

பிரயோக
கணிதம் 89

பரீட்சைக்குத் தயாராகும் மாணவர்கள் நேரம் கணிப்பிட்டு பயிற்சி பெறுவதற்கேற்ற வகையில் மாதிரி வினாத்தாள்களும் விடைகளும் ஆக்கப்பட்டுள்ளது. சகல புத்தக விற்பனையாளர்களிடமும் இவ் வினா விடையைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆசிரியர்:
திரு. சி. துரையப்பா,
St. John's College.

மணமக்கள் தேவையா,
எம்மிடம் எல்லாச் சாதி, சமயத்திலும் மணமக்கள் இருக்கிறார்கள்.

"மங்கள ஏஜென்சி"
கொய்யாத்தோட்டம்,
யாழ்ப்பாணம்.

கைதடியில் உள்ள பிரபல்யமான வைத்தியசாலை ஒன்றிற்கு DAM/RMP ஒருவர் தேவை. தொடர்பு: 'பிறங்கிரி' கைதடி.

Practising Chartered Accountants are Eligible for Membership of a Body of Management and Taxation Accountants of Australia. Send Bio-Data and S. A. E. Rs 5.75 stamps. To obtain related Forms: Professional Associates. C/o Parangiri, Kaithadi.

New Classes In Accountancy

| | | | |
|---|---|---|---|
| CIMA | STAGE | I | 18 - 11 - 1989 |
| | STAGE | II | 2 - 12 - 1989 |
| | STAGE | III | 2 - 12 - 1989 |
| AAT (London) | PRELIM | | 18 - 11 - 1989 |
| | INTER | | |
| | FINALS | | |
| AAT (Srilanka) | STAGE | I | 18 - 11 - 1989 |
| | STAGE | II | 1- - 11 - 1989 |
| IDPM | PART | I | 18 - 11 - 1989 |
| | PART | II | |
| IAB (All Parts) | | | |

விபரங்கட்கு :-
NORTH CEYLON TECHNICAL INSTITUTE
14, St. Peters Lane,
Hospital Road,
Jaffna.

"நீமியா உரம்"
மண்ணை வளமாக்கிப் பயிர்களுக்கு ஊட்டமளித்து விளைச்சலைப் பெருக்கி, கறையான் மற்றும் பூச்சிகளை ஒழிக்கிறது.
500 கிறாம் கொண்ட பைக்கற் ரூபா. 5/- மட்டுமே!
வியாபாரிகளுக்கு விசேட விலை சகாயம்.
மில்க்வைற்,
யாழ்ப்பாணம்.

அலை
இதழ்கள்
1–12
(1975–78)
தொகுதி - I
(மறு பதிப்பு)
பிரதி விலை: ரூபா 125/-
தொடர்பு:
அ, யேசுராசா
48, சுயஉதவி
வீடமைப்புத் திட்டம்
குருநகர்
யாழ்ப்பாணம்

ஜீவாகாரம்
ஒரு அண்ணா தொழிலக தயாரிப்பு
இணுவில்
இது குழந்தைகள், பிள்ளைகள், பாடசாலைச் சிறுர்களுக்கான சிறந்த ஒரு குறை நிரப்பு உணவாகும்.
(பாடசாலைப் பிள்ளைகளுக்கு இவ்வுணவு மிகவும் உகந்தது)
கர்ப்பிணிப் பெண்களுக்கும், பாலூட்டுந் தாய்மார்களுக்கும் ஏற்ற போசாக்கு உணவு இதுவாகும்.
இவ்வுணவு பொரியரிசி, வறுத்த சோயா, வறுத்த உழுந்து சேர்த்து மாவாக்கப்பட்டு உடன் சாப்பிடுவதற்கு ஏற்றதாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. 100 கிராம் ஜீவாகாரத்தில் 17 கிராம் புரதமும் 400 கி. கலோரி சக்தியுமுண்டு.
ஆரம்ப சுகாதார ஆராய்ச்சிப் பகுதி
யாழ். போதனா வைத்தியசாலை

# போர்க்களத்தில் புதியபாடம்

இந்திய ஜவான்கள் இலங்கையில் பலயுத்தகளப் பாடங்களைப் படித்துவருகின்றனர் என இந்தியா ருடே (India Today) என்ற சஞ்சிகையில் இது பற்றி வெளிவந்த கட்டுரையை சண்டே ரைம்ஸ் (நொவம்பர் -5) மறுபிரசுரம் செய்தது.

கட்டுரை ஆசிரியர் ஷேகர் குப்தா.

குப்தா தளபதி கல்கட்டின் தலைமை அலுவலகத்திற்கு அண்மையில் சென்றபோது, அவர் ஓர் முக்கியமான விடயத்தை அவதானித்தார்.

காவலுக்குநின்ற படைவீரனின் கையில் இருந்த துப்பாக்கி வழமையான இந்தியப் படையின் ரகத்தைச் சார்ந்ததாயிருக்கவில்லை. அது கலக்ஷினெவ் (Kalakshinov) ரகத்தைச் சார்ந்திருந்தது.

காவலுக்குநின்ற வீரன் பரா கொமாண்டோ பிரிவைச் சேர்ந்தவர் எனக் குறிப்பிடும் குப்தா, இலங்கையில் (வட பகுதியில்) பாதிக்கப்பட்ட அமைதிப்படைப்பிரிவு இந்தப் பரா கொமாண்டோக்களே என்று சுட்டிக்காட்டுகிறார்.

தாம் பாவித்த இந்திய ரைபிள்கள் இடராக இருப்பதாக ஓர் அதிகாரி குறிப்பிட்டு விட்டு, புலிகளிடமிருந்து தாம் கைப்பற்றிய கலக்ஷினெவ் ரைபிள்களையே தாம் பயன்படுத்துவதாகவும் சொன்னார்.

இலங்கையில் கற்ற பாடங்கள் இராணுவ வல்லுனர்களால் ஆராயப்படுகின்றனவாம்.

□□ **ராஜன்** □□

இந்திய இராணுவம் பயன்படுத்திவரும் காலாட்படை போர் உத்தி போதனா நூல்கள், இலங்கை அனுபவத்தின் பின்னணியில் திருத்தி எழுதப்படுகின்றனவாம்.

'நீண்டகால நோக்கில், இலங்கை எமது இராணுவத்தில் வித்தியாசத்தை, மாற்றத்தை ஏற்படுத்தும்'' எனக் கல்கட்டே கூறுகின்றார்.

30 ஆண்டுகளாக எதிர்க்கிளர்ச்சி முயற்சிகளில் ஈடுபட்ட அனுபவம் இந்திய இராணுவத்திற்கு இருந்தபோதும், இலங்கையில் பல பாடங்களைக் கற்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது என்பதை, பல உயர் அதிகாரிகள் ஒப்புக்கொள்கின்றனர்.

ஓர் தளபதி கூறுகின்றார்: ''இன்றைய ஜவான் எழுத்து வாசனை அறிவுடையவன். அவன் பி.பி.சி. வானொலிச் செய்திகளைச் செவிமடுத்து, கேள்விகளை எழுப்புகின்றான். அவன் இங்கு என்ன செய்கிறான் என்பதை நாம் விளக்க வேண்டும். இதனை நாம் முன்பு செய்யத் தவறி விட்டோம். அதற்கான தண்டனையையும் பெற்றோம்.''

இந்தச் சூழ்நிலையில் சாதாரண ஜவான்களின் சந்தேகங்கள் தீர்க்கப்படாத நிலையில், அவர்கள் இந்த யுத்தத்தையும் வேறு யுத்தம்போன்று கருதி, அட்டகாசங்களிலும், அழிப்புக்களிலும் ஈடுபட்டனர்.

இதனை மேஜர் ஜெனரல் அசோக் மேத்தா பின்வருமாறு வர்ணிக்கின்றார்: ''எம்மை எதிர்த்தவன் எமது பகைவன் அல்லன் என்ற ஓர் நிலைமையில் நாம் போராடக் கற்க வேண்டியிருந்தது.''

ஜவான்களின் அஸ்தியை மட்டும் இந்தியாவிற்கு திருப்பியனுப்பும் வழக்கம் காலத்துக்கொவ்வாதது என்பதனை இந்திய இராணுவம் உணர, காலம் எடுத்தது. இதுவரை காலமும் உயரதிகாரிகளின் சடலங்களே திருப்பி அனுப்பப்பட்டன.

மரணத்திலும் வர்க்கபேதம் போலும்!

வழமைக்கு மாறான நிலைமையில் சாதாரண இராணுவத்தின் போதாத தன்மை புலனாகியதென்றும், இதற்கு எடுத்துக்காட்டாக மட்டக்களப்பின் தென்பகுதியிலும் தென்மேற்குப் பகுதியிலும் புலிகளின் முகாம்கள் அமைக்கப்பட்டிருந்தமையை, நவீன தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி இந்திய இராணுவம் அறிந்திருந்த போதிலும், இவற்றைக் கைப்பற்ற மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் பலிக்கவில்லையாம் எனக் கட்டுரை குறிப்பிடுகின்றது.

''நாம் சிறந்த பயிற்சியைப் பெற்றுள்ளோம். துப்பாக்கிரவைக்கு எமது பையன்கள் இப்பொழுது பயப்படுவதில்லை'' என்கிறார் மேஜர் ஜெனரல் பல்லா.

கொடுக்கில்தான் விஷமுள்ளது என்பதற்கேற்ப, கட்டுரையின் இறுதி வசனம் வருமாறு:

இந்தப் பயிற்சியைப் பெறுவதற்கு ஆயிரம் பேர் இறந்திருக்க வேண்டுமா, 3000 பேர் காயமடைந்திருக்க வேண்டுமா என்பது வேறு விடயம். □

---

## விளையாட்டுச் சரம்

# 'நேரு கிண்ண' கிரிக்கட் போட்டிகள்

## — ஒரு விமர்சனம்

நேரு கிண்ணத்துக்காக நடைபெற்ற, ஆறு நாடுகள் பங்கு பற்றிய, மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட பதினைந்து போட்டிகளும் கிரிக்கட் ரசிகர்களிடேயே மட்டுப்படுத்தப்படாத திகிலினையும் நினைவலைகளையும் எழுப்பி விட்டுச் சென்றுள்ளன. இப்போட்டிகளிலே ஒவ்வொரு நாட்டுக்கும் எவ்வளவு தூரம் வெற்றி கிட்டியுள்ளது? வீரர்கள் என்ன சாதித்துள்ளார்கள்? என்பன பற்றி சற்று நோக்குவோம்.

மூன்று வாரங்களுக்கிடைப்பட்ட காலப்பகுதியிலே பாகிஸ்தான், 'சார்ஜா கிண்ணம்', 'நேருகிண்ணம்' என்னும் இரு போட்டித் தொடர்களை வென்று ''ஒரு நாள் போட்டியிலே நாமே முடிசூடா மன்னர்'' என்பதை சொல்லாமல் சொல்லியுள்ளது. பாகிஸ்தான் அணித்தலைவர் இம்ரான் கான், 3 தடவைகள் ஆட்டத்தின் நாயகனாகவும், இறுதியில் போட்டித்தொடரின் நாயகனாகவும் தெரிவு செய்யப்பட்டது மட்டுமல்லாமல், தனது அணியையும் சிறப்பாக வெற்றிக்கு வழி நடத்திச் சென்றுள்ளார். இவர் கையாண்ட சில உத்திகள் எதிரணியை பல சமயங்களில் திண்டாட வைத்தன. இலங்கையுடன் அவர் அடித்த 84 ஓட்டங்களும் இறுதிப் போட்டியில் அடித்த 55 ஓட்டங்களும் சிறந்த, பொறுப்பு மிக்க ஆட்டங்களாகும். அணியின் புதிய வீரர் அமீர் மலிக் அடித்த இரண்டு அரை 'சதங்களும் (77;51) அணிக்கு உபயோகமாக இருந்தன. சலீம் மலிக், றமீஸ் ராஜா ஆகியோர், அணிக்கு வேகமாக ஓட்டங்கள் தேவைப்பட்டபோது அதனை நிவர்த்தி செய்தார்கள். இங்கிலாந்துடனான போட்டியிலே 41 பந்துகளில் மலிக் பெற்ற 66 ஓட்டங்களையும் பம்பாய் மைதானம் என்றும் மறக்காது.

பாக். அணியின் வீரர்கள் எல்லோரும் வெற்றிக்காகவே ஆடினார்கள். அணி, எவ்வளவு இக்கட்டாக இருந்த போதும் பயம், சோர்வு அற்றவர்களாயும் துணிவு, அவதானம் கொண்டவர்களாயும் ஆடினர். அப்துல் காதிர், வசீம் அக்ரம், அக்ரம் ரசாக் ஆகியோர் இதற்கு செயல் வடிவம் கொடுத்தனர்; பாகிஸ்தானுக்கு வெற்றியும் கிடைத்தது.

கடந்த 10 வருடங்களாக சர்வதேசப் போட்டிகளில் சிறப்பாக ஆடாத மே. இந்திய அணி, இம்முறையும் இறுதிப் போட்டியில் தோல்வி கண்டுள்ளது. அவுஸ்திரேலியாவுடன் மட்டுமல்லாது இலங்கையுடனும் தோல்வியைச் சந்தித்தது. இப்போட்டிகள் எதிலும் விவியன் ரிச்சாட்ஸ் அரை 'சதம்' கூட அடிக்கவில்லை. ஆனால் இந்தியாவுடனான போட்டியில் 6 விக்கட்டுகளை வீழ்த்தியது அபாரம், உபதலைவர் ஹெயின்ஸ் அடித்த இரு 'சதங்'களும் (107;137) கிரிக்

**ஜி. எஸ். சவரிமுத்து**

கட் துறையில் அவரது அனுபவங்களைப் பின்னணியாகக் கொண்டவையாக இருந்தன. ரிசாட்ஸனின் நான்கு அரை 'சதங்'களும் துடிப்பு மிக்கவையாக இருந்தன. பந்து வீச்சைப் பொறுத்த வரையில் பெஞ்சமின் இலங்கை, அவுஸ்திரேலியாவுடன் தலா 3 விக்கட்டுகளை வீழ்த்தினார். மல்கம் மாஷல் இங்கிலாந்துடன் 4 விக்கட்டுகளை வீழ்த்தினாலும் அவரது பந்து வீச்சில், முன்னிருந்த வேகத்தைக் காண முடியவில்லை. எனினும் கிர்னிச் (உலகின் சிறந்த ஆரம்ப துடுப்படி வீரர்), பற்றசன் (சிறந்த வேகப் பந்து வீச்சாளர்) ஆகியோர் அணியிலே இடம் பெற்றிருந்தால், மே. இந்திய தீவுகள் அணியின் ஆட்டம் நிச்சயம் களை கட்டியிருக்கும்.

தனது அணித்தலைவர்களை மாற்றியும், பல தோல்விகளைச் சந்தித்தும் வந்த இங்கிலாந்து, எதிர்பாராத வெற்றிகளை ஆரம்பத்திலே பெற்று, போட்டித் தொடரில் பல திருப்பங்களை உண்டாக்கியது. தலைவர் கிரகாம் கூச் பெற்ற இரு அரை 'சதங்'களும், வீழ்த்திய 3 விக்கட்டுகளும் அணிக்கு ஆரம்ப வெற்றிகளைத் தேடித் தந்தன. தனக்கே உரிய பாணியில் இந்தியா, இலங்கை, பாகிஸ்தானுடன் அலன் லாம்ப் பெற்ற 91, 52, 42 ஆகியன அணிக்குப் பெரிதும் உதவின. 8 வருடங்களின் பின் லாக்கின்ஸ் மீண்டும் தனது அணிக்குத் தெரிவாகி, அவுஸ்திரேலியாவுடன் 124 ஓட்டங்களும் பெற்றார். பந்து வீச்சே இங்கிலாந்து அணியின் முக்கிய குறைபாடாக இருந்தது. கேப்பல், கிளஸ்ரன் ஸ்மால், கூச் ஆகிய பந்து வீச்சுத் துறையில் அனுபவம் குறைந்த வீரர்களால் குறிப்பிடத்தக்கள பில் எதனையும் சாதிக்க முடியவில்லை. விளைவு? இங்கிலாந்து இறுதிப்போட்டிக்குச் செல்லத் தவறியது.

1987 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டிகளில் அரையிறுதிப் போட்டியுடன் தோல்வியின் பக்கம் சாய்ந்த இந்திய அணி, இம்முறையும் அதே வேலையைச் செய்துள்ளது. அரையிறுதிப் போட்டி வரை ஓட்ட வீதத்தை (run rate) பொறுத்தமட்டில் 1ஆம் இடத்தில் நின்ற இந்திய அணி, இறுதிப்போட்டிக்கு செல்லாமைக்குக் காரணம், மத்திய நிலை துடுப்பாட்ட வீரர்களே என்று அணித்தலைவர் சிறீகாந்த் குற்றம் சாட்டியுள்ளார். பாக். உடனான போட்டியில் இந்திய ட ஒருகட்டத்தில் விக்கட் இழப்பின்றி 120 ஓட்டங்களைப் பெற்றமையும் பின்னர் 203 ஓட்டங்களுக்கு சரிந்தமையும் இதற்கு சிறந்த சான்று. சிறீகாந்த், லம்பா, சித்து ஆகியோர் அணிக்காக மொத்தம் 8 அரை'சதங்'களை அடித்தனர்.

இவர்களைத் தவிர சாஸ்திரி, அருசாதீன், வென்சாக்கர் ஆகிய எவரும் அணியின் நிலையை உணர்ந்து ஆடவில்லை. வென்சாக்கர் இங்கிலாந்தின் பந்து வீச்சாளர் கிளஸ்ரன் ஸ்மாலுடன்'சேட்டை'பண்ணி அடுத்த பந்திலேயே ஆட்டமிழந்ததையும், இலங்கையுடனான ஆட்டத்தில், அமர்நாத், வியூகத்தை இடையூறு செய்தமை (Obstructing the Field) என்ற பெயரில் ஆட்டமிழந்தமை ஆகியன, அணியிலே நடைபெற்ற சில ஒழுக்கக்கேடான சம்பவங்களாகும்.

தனது 101 ஓட்டங்களால் இங்கிலாந்தை தோற்கடித்த சேட்டன் ஷர்மா, போட்டித் தொடரில் ஒரு திருப்பு முனையை உண்டாக்கினார். கபில் தேவின் ஆட்டமும்'ஒஹோ'என்றில்லாவிட்டாலும் ஓ கே. மற்றும் ஜெய் சர்மா, அர்ஷாத் ஐயும் ஆகியோரின் ஆட்டமும் அபாரம்! ஆனாலும் மனிந்தர் சிங், சஞ்சய் மஞ்ரேஜக்கர் ஆகியோர் ஏன் போட்டிகளுக்குத் தெரிவு செய்யப்படவில்லை என்பது கேள்விக்குறியே.

அவுஸ்திரேலியா, போட்டிகளில் சிறப்பாக ஆடவில்லை. என்ன நடந்தது? பூன் – மாஷ் ஜோடி, அணிக்கு சரியான ஆரம்பத் துடுப்பாட்டத்தை வழங்காமை, சுழல்பந்து வீச்சாளர் ரிம் மே காயமடைந்தமை ஆகியவையே அவுஸ்திரேலியாவின் வீழ்ச்சிக்கு காரணம். அணித்தலைவர் அலன் போடர் பெற்ற 8 பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் அடங்கிய 84 ஓட்டங்களும்; ஜோன்ஸ் பெற்ற 3 அரை'சதங்'களும் அவுஸ்திரேலியாவின் வெற்றிக்குப் போதவில்லை.

மே. இந்திய தீவுகளுடன் வெற்றி பெற்ற இலங்கை, பின்னர் நடந்த இருபோட்டிகளில் ஆறே ஓட்டங்களால் தோல்வியும் கண்டது. குருசிங்க, அரவிந்த டி சில்வா ஆகியோர் முறையே 2, 3 அரை 'சதங்'கள் பெற்றனர். எப்போதும் சிறப்பாக ஆடும் ரணதுங்க, மகாநாம ஆகியோர் இம்முறை சோபிக்கவில்லை. இலங்கைக்கு சர்வதேச போட்டித் தொடரொன்றில் எப்போது வெற்றிகிடைக்கும்?

நேரு கிண்ணப்போட்டிகள் சிறப்பாகவும், கிரிக்கட் ஆட்டத்துக்குரிய 'திகில்' பாணியிலும் நடந்தேறியிருந்தாலும், ஒவ்வொரு நாடும் தமது அணிக்குரிய வீரர்களை தெரிவு செய்கையில் கையூட்டு, அரசியல் ஊடுருவல், செல்வாக்கு ஆகியன மேலோங்கி நிற்பதாக Sport – Stars என்ற சஞ்சிகை விமர்சித்துள்ளது. "Cricket For Unity'' என்ற பெயரில் நேரு கிண்ணப் போட்டிகள் நடந்துள்ள இவ்வேளையில்''அரசியல் செல்வாக்கு அற்ற கிரிக்கட்'' ''லஞ்சம், செல்வாக்கு அற்ற போட்டி''என்றெல்லாம் போட்டிகள் நடத்தினால் திறமைக்கும் பரிசு கிடைக்குமல்லவா? எதிர்காலத்தில் இத்தகைய போட்டிகளை நடத்த இருப்பவர்களுக்கு இக்கருத்து சமர்ப்பணம்! □

## வடக்குக் கிழக்குப் பகுதிக் காடுகள்

# அழிவதைத் தடுப்பார்களா?

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் உள்ள காடுகள் வேகமாக அழிக்கப்பட்டுவருவதால் இப்பிரதேசங்கள் பாரிய ஆபத்தினை எதிர்நோக்கிவருகின்றன. இலங்கையின் கரையோரப் பிரதேசங்களின்சூழலில் காட்டுவளமே பெரும் பங்காற்றி வருகின்றது.

காடுகளில் உள்ள மரங்கள் சூழலுக்கு பல நன்மைகளைச் செய்து வருகின்றன. வளிமண்டலத்தை மாசடைய வைக்கும் காபனீரொட்சைட்டின் அளவைக் குறைத்து, ஓட்சிசன் வாயுவின் அளவை அதிகரிப்பதில், மரங்கள் முக்கிய பங்காற்றுகின்றன. தாவரங்களின் பகல்நேர சுவாசத்தின்போதும் ஒளித்தொகுப்பின் போதும் ஒட்சிசன் வளிமண்டலத்தை அடைகின்றது.

காடுகள் நாம் சுவாசிக்கும் வளியில் ஏற்படும் வரட்சியை தடுப்பதிலும்; மண்ணரிப்பு, மண்சரிவு, விலங்குக்காப்பு, தாவரக்காப்பு போன்றவற்றையும் பாதுகாத்து வருகின்றன. இலங்கையில் 1950 ஆம் ஆண்டு செய்யப்பட்ட ஆய்வின் படி 56.5 வீதமான நிலப்பரப்பு காடுகளைக் கொண்டிருந்தது. ஆண்டுதோறும் ஒரு

**நிரா ராஜ்மோகன்**

வீதமான காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றதாக, அண்மைக்கால ஆய்வுகளில் இருந்து தெரியவந்துள்ளது. இயற்கைச் செயல்களைவிட செயற்கைச் செயல்களினாலேயே காடுகள் எமது பிரதேசத்தில் வேகமாக அழிக்கப்பட்டு வருகின்றன.

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் காணப்படும் காடுகளில் பெரும்பாலானவை, 'அயனமண்டல பருவக் காற்றுக் காடுகள்' என்ற வகையினுள் அடங்குகின்றன.

இலங்கையின் மொத்தக் காட்டுத் தொகையில் நாற்பது வீதமானவை, வடக்குக் கிழக்குப் பகுதிகளில் காணப்படுகின்றன. இக்காடுகள் அண்மைக் கால செயற்கை, இயற்கை அழிவுகளினால் வேகமாகக் குறைந்து கொண்டு வருகின்றன. களவாக மரம் வெட்டுவதனாலேயே கூடுதலான அழிவுகள் ஏற்பட்டு வருகின்றன.

இவ்வருடம் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் மழை வீழ்ச்சி மிகவும்குறைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. முன்னைய வருடபுள்ளிவிபர அறிக்கைகளை ஒப்பிடும் போது, மழைவீழ்ச்சி வீதம் வருடாவருடம் குறைந்து கொண்டே வருகின்றது. பல பகுதிகளில் குளங்கள் வற்றிய நிலையில் உள்ளதால் விவசாயிகள் பெரும் நஷ்டத்துக்குள்ளாகியுள்ளார்கள். நெல் உற்பத்தி இவ்வருடம் என்றும் இல்லாத அளவிற்குக் குறைந்துள்ளது; அரிசிவிலையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

காடுகள் வேகமாக அழிக்கப்பட்டு வருவதால் நாமே எமக்குத் தீமையை ஏற்படுத்தி வருகின்றோம். அதிகமாக, ஒரு மரம் வெட்டுவதற்காகப் பத்து மரங்கள் அழிக்கப்பட்டுவருகின்றன. காட்டுமரம் வெட்டுவோர் இலாபம் ஒன்றை மட்டுமே நோக்கமாகக் கொண்டு செயற்பட்டு வருகின்றார்கள்.

எமது பகுதிக் காடுகளில் முதிரை, பாலை, கருங்காலி, வீரை போன்ற இனமரங்களே அதிகம் காணப்படுகின்றன. வீடுகட்டுதல், தளபாட உற்பத்தி, எரிபொருள் என்பன வற்றிற்காகவே இவை பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

காடு அழிப்பில் இருந்து காட்டைப்பாதுகாக்க, இலங்கை அரசினால் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் அவை, வடக்குக் கிழக்குப் பகுதிக் காடுகளில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. புதியபல இனமரங்கள் தென்பகுதிக் காடுகளில் வேகமாக மீள் நடுகை செய்யப்பட்டுவருகின்றன; இதனால், தென்பகுதிக் காட்டுவளம் ஓரளவு பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

முன்னர் எமது பிரதேசக் காடுகளில் இப்பில் இப்பில், யூக்கிளிப்ரஸ் (சஞ்சீவிமரம்), தேக்கு போன்றபல இனமரங்கள் மீள்நடுகைக்காக உபயோகப்படுத்தப்பட்டன. முல்லைத்தீவு மாவட்டத்தில், ரூபவாஹினி அஞ்சல் நிலயம் அமைந்துள்ள கொக்காவில் என்னும் பகுதியில், மேற்படி புதிய இன மரங்கள் புகுத்தப்பட்டன. பல வருடங்களுக்கு முன்னர் மேற்கொள்ளப்பட்ட இந்த 'மீள்வனமாக்கல்', சில வருடங்களாக கைவிடப்பட்டதால், புகுத்தப்பட்ட இனமரங்களும் அழிந்துவருகின்றன. இத்திட்டத்துடன் இலங்கை அரசின் வடக்குக் கிழக்குப் பகுதிக்கான மீள்வளமாக்கல் திட்டம், இடைநிறுத்தப்பட்டுள்ளது. தென்பகுதியில் மட்டும் மரநடுகை, மீள்வனமாக்கல் திட்டங்கள் அதிகளவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. □

# நோபல் பரிசு பெற்ற

## தீபெத்தின் ஆன்மீகத் தலைவர்

'வாழும் புத்தர்' என தீபெத்தியர்களால் அழைக்கப்படும் 'தலாய் லாமா' வுக்கு 5-10-89 அன்று உலகின் உயிர் விருதுகளில் ஒன்றான 'சமாதானத்'துக்குரிய நோபல் பரிசு வழங்கப்பட்டது. உடனேயே நோர்வேயிலுள்ள சீனத் தூதுவர் தனது கண்டனத்தைக் கூறத் தவறவில்லை. தீபெத்தியர்களின் 14 ஆவது தலைமைப் பிக்கு 'தலாய் லாமா' ஆவார். இவ் ஆன்மீகத் தலைவர்கள் 598 வருடங்களாக தீபெத்தை ஆண்டு வந்துள்ளனர்.

1950இல் சீனா, தீபெத் தனது பகுதி எனக் கூறிக்கொண்டு நாட்டினுள் புகுந்தது. 5 பேர் கொண்ட சமாதானத் தூதுக் கோஷ்டியை பீக்கிங்கிற்கு லாமா அனுப்பினார். அதன் அடிப்படையில் ஆட்சி பகிர்ந்து கொள்ளப்பட்டது. ஆயினும் 1959இல் 300,000 அதிருப்தியாளர்கள் சீன ஆட்சியை எதிர்த்தனர். நிலைமையின் போக்கினை உணர்ந்த துறவி, உலகின் மிக உயரமான சிகரங்களைக்கடந்து இந்தியாவை அடைந்தார். சீனாவுக்கு எதிரான இயக்கங்களை உருவாக்க மாட்டார் என்ற உறுதிமொழியுடன் இந்தியா தஞ்சம் அளித்தது.

1935 இல் தீபெத்தில் உள்ள ஓர் சிறு கிராமத்தில் ஏழையாகப் பிறந்தவர் இவர். இரண்டு வயதில், இவரே தமது தலைமைப்பிக்கு எனக் கூறி இவரை பிக்குக்கள் கோஷ்டியினர் அழைத்துச் சென்றனர். தலைநகர் லாசாவில் 1000 அறைகள் கொண்ட மாளிகையில், கட்டுப்பாடுகளின் மத்தியில் இளமையைக் கழித்தார். 18 வருடம் சமயக் கல்வி கற்றார். இளமைக்காலங்களைப் பற்றி அவர் சிரிப்புகளினிடையே கூறுவது தான் மாளிகையில் திரைப்படக் கருவி ஒன்றை வைத்து 'டார்ஸான்', 'ஹென்றிப' போன்ற படங்களை பார்த்ததாகவும், மாளிகையின் மேல்மாடியில் ஓர் தொலைகாட்டியை உபயோகித்து லாசாவின் வீதிகளைப் பார்த்து ரசித்ததாகவுமே. பொறியியல் துறையில் நல்ல அனுபவம் பெற்றவராகவும், மாளிகையின் மின் வழங்கியைத் திருத்தக் கூடியவராகவும் இருந்தார்.

இன்று டெல்லிக்கு வடக்கே 250 மைல் தூரத்தில் அவரது 'தர்மசாலா' அமைந்துள்ளது. இவருடன் 7 அங்கத்தவர்கள் கொண்ட நிழல் மந்திரிசபையும், வைத்தியர்களும், சோதிடர்களும் வசிக்கின்றனர். அதிக நேரம் பிரார்த்தனையில் ஈடுபடுபவராகவும், மிகுதி நேரத்தில் தோட்டவேலையிலும், கைக்கடிகாரங்கள் ரேடியோ என்பனவற்றை திருத்துவதிலும் ஈடுபட்டிருப்பார்.

**பீகோ அய்யர்**
**தமிழில்:**
**சு. மகேந்திரன்**

மௌனத்தை எதிர்பார்க்கும் (சீனாவைப் பற்றி) ஓர் நாட்டில் இருந்து கொண்டு தனது எதிர்ப்பு நாட்டின்மேல் உலகின் வெறுப்புப் பார்வையைப் பதிய வைத்த துறவி இவர். 1987இல் சீன எதிர்ப்பு தீபெத்தில் தீவிரமடைந்து 32 பேர் இறந்த போது, புகழ் வாய்ந்த பேட்டி ஒன்றை தனது தர்மசாலாவில் நடத்தினார். தீபெத் வேறொரு நாடு என்பதை சீனா உணரவேண்டும். இரண்டும் ஒரே நாடு எனின் அவை ஒன்றாகவே இருக்கும். ஆனால் அது உண்மையல்ல. ஆகவே கூடிய சுயாதீன அதிகாரங்களுடன் சீனாவின் கீழ் தீபெத் வாழமுடியும் என்றார் அப்பேட்டியில் அவர்.


தீபெத்திய மக்கள் வன்முறையை நாடியபோது, அவர் அதனை அங்கீகரிக்கவில்லை. 300,000 சீனப் போர்வீரர்களைக் கொண்ட ஓர் நாட்டில் முடிவுகள் மிகக் கவனமாக எடுக்கப்படவேண்டும் என்பதில் அவர்என்றும் மாறவில்லை. கோபம் ஏற்படின் சரியான முடிவுகளை எடுக்கமுடியாது. உண்மை நிலைமை விளங்காமல் கூடிய அனர்த்தங்கள் உருவாகலாம். 1.4 மில்லியன் மக்கள் அழிக்கப்பட்டபோதும் 6254 மடங்கள் உடைக்கப்பட்டபோதும், தான் சிறிதும் கோபமடையவில்லை என்கிறார் துறவி. 'மகாயான பௌத்தத்தைப் பின்பற்றும் நாம் வரையறுக்கமுடியாத பொறுமையை வேண்டியே தினமும் பிரார்த்திக்கிறோம். ஆகவே சீனர்கட்கு எதிராக கோபதாபங்களைக் காட்டமுடியாது. அவர்கட்கு, புரிந்துணர்வை ஏற்படுத்தவே முயல வேண்டும்' என்ற கருத்தை எப்போதும் இவர்சொல்பவர்.

வெளியேறிய 100,000 மக்களுடன் தீபெத்தில் உள்ள 3.8 மில்லியன் மக்களுடையவும் மதிப்பு மிக்க தலைவரான இவர் கூறுவது, என்னை மக்கள் நேசிப்பது மதபக்தியினால் மட்டும் அல்ல. சீனர்கள் தீபெத்தியர்களைச் சரியாக நடத்தியிருந்தால் என்னை மக்கள் மறந்திருப்பார்கள். எனது பெருமைக்குக் காரணம் நானல்ல; சீனர்களே.

1963இல் இவரது புதிய பிரகடனத்தின் படி இவருக்குப் பின் தலைமைப்பதவி 'வத்திக்கான்' அமைப்புப் போல் தேர்தல் மூலமோ, அல்லது முதுநிலைத் தேர்வின் மூலமோ நிரப்பப்பட வகைசெய்துள்ளது. தேவை இல்லை எனக் கருதப்பட்டால் அமைப்பு கலைக்கப்படவும் வகை சொல்லப்பட்டுள்ளது. பௌத்தக் கோட்பாடுகள் யாவும் பரிசோதனை வாயிலாக நிருபிக்கப்படவேண்டும் என்றும், புத்தர் தனது வாயால் கூறிய கோட்பாடுகள் நிருபிக்கப்படாதவிடத்து அனுசரிக்கப்பட வேண்டியவையல்ல என்றும் இவர் சொல்கிறார். 'மெட்டாபிசிக்ஸ்' (Metaphysics) இல் டொக்ரர் பட்டம் பெற்றவர் இவர். அமெரிக்காவில் தியானத்திலிருந்த போது நோபல் பரிசு செய்தி அறிவிக்கப்பட்டது. தியானம் முடிய உதவியாளர் செய்தியை கூறிய போது எந்தவித உணர்வையும் அவர் காட்டவில்லை என்கிறார் B.B.Cயின் அறிவிப்பாளர்.

1984இல் இவரது புகழ் பெற்ற 'அன்பியல், துறவறவியல், உள்ளுணர்வு இயல்' என்ற நூல் வெளியிடப்பட்டது. இதில் எனது மதம் அன்பே என்கிறார். அவரது வாழ்வு தனிமை வாய்ந்தது. சமீபகாலங்களில் தாய், மூத்த ஆசிரியர், மூத்த சகோதரர் ஆகியோர் மறைந்தனர். இவை பற்றிக் கூறும்போது 'நேற்று போய் இன்று வருவது போல் பழைய நண்பர்கள் மறைய புதிய நண்பர்கள் உருவாகுவார்கள். ஆனால் உண்மையில் வேண்டப்படுவது 'அர்த்தமுள்ள நாட்களும்', 'அர்த்தமுள்ள நண்பர்களும் தான்'.

நேபாளத்திலும் இந்தியாவிலும் சிரமங்களின் மத்தியில் தீபெத்திய குடியிருப்புக்களை உருவாக்கியுள்ளார். ஜனநாயக இயக்கத்தை தனது சொந்த மண்ணில், அரசியல் அதிகாரத்துக்காக கொடுமையான முறையில் அடக்கிய சீன அரசு, தீபெத்தியர்களின் தனித்துவத்தைக் காப்பாற்றும் என்பது பொய்யே. இவர் உண்டாக்கியுள்ள குடியிருப்புக்கள் ஓர் அளவிற்கு தீபெத்தியர்களின் தனித்தன்மையைக் காப்பாற்றும். சுவீடிஷ்



அக்கடமியின் இப்பெறுமதி மிக்க விருது, இவ்வருடம் இவருக்கு அளிக்கப்பட்டமை பொருத்தமே. கடின இதயம் கொண்ட சீன ஆட்சியாளருக்குக் கிடைத்த ஓர் கசப்பு மருந்தாகும் இது.

நன்றி : ரீடர்ஸ் டையஸ்ட் □

## நேரமெடுங்கள்

சிந்திக்க நேரமெடுங்கள்,
அதுதான் சக்தியின் மூலஸ்தானம் ......
விளையாட நேரமெடுங்கள்,
அதுதான் இளமையின் நித்திய இரகசியம்........
வாசிக்க நேரமெடுங்கள்,
அதுதான் விவேகத்தின் ஊற்று.........
வணங்க நேரமெடுங்கள்,
அதுதான் உலகத்தின் பெருஞ் சக்தி.........
அன்பு பாராட்டவும், பாராட்டப்படுதற்கும் நேரமெடுங்கள்,
அதுதான் ஆண்டவன் தந்த விசேட சலுகை.........
சிநேகங் கொள்ள நேரமெடுங்கள்,
அதுதான் மகிழ்ச்சியின் பாதை........
சிரிக்க நேரமெடுங்கள்,
அதுதான் ஆத்மாவின் இசை ........
கொடுக்க நேரமெடுங்கள்,
அதுதான் சுயநலமாக இருப்பதற்கு இது மிகக் குறுகிய நாள் .......
வேலை செய்ய நேரமெடுங்கள்,
அதுதான் வெற்றியின் விலை.........

தமிழில் : மூ. சி. சீனித்தம்பி
நன்றி : அகில இலங்கை மகளிர் மாநாட்டுச் செய்தி மடல் (1988). □

கலைச்சாரல்

# இருநூறு பிரதிகளும் இலக்கிய முயற்சிகளும்

□ அபராஜிதா □

ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவிய, சிற்பக்கண்காட்சி 'யாழ். இந்துக் கல்லூரி' குமாரசுவாமி மண்டபத்தில் 1989 ஒக்ரோபர் 28, 29-ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இக் கண்காட்சியினை நடாத்துவதற்காக, தனது அதிகார எல்லைக்கப்பாலும் சென்று பெருமுயற்சி எடுத்துழைத்தவர் பிரதேச உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு சு. டிவகலாலா என்பதில் இருவேறுபட்ட கருத்துக்கள் நிலவ இடமில்லை.

இக்கண்காட்சி, யாழ். மாவட்ட உள்ளூராட்சித் திணைக்களம், ஈழத்தில் வெளிவந்த நூல்கள் ஒவ்வொன்றிலும் இரு நூறு பிரதிகளைக் கொள்வனவு செய்வதற்கான முன்னோடி நிகழ்ச்சியாகக் கருதப்பட்டமையால், எழுத்தாளர்களிடையேயும், ஏனைய கலைஞர்களிடையேயும் பலத்த எதிர்பார்ப்புகளையும், பரபரப்பினையும் ஏலவே தோற்றுவித்திருந்தது. கொள்வனவு செய்ய இருக்கும் நூல்கள் மட்டுமல்லாமல் அரிதான நூல்களையும் ஒருங்குசேர மக்களின் பார்வைக்கு வைப்பதனால் அவர்களின் 'வாசினை' ஆற்றலையும், ஈழத்துக்கலைஞர்களின் பெருமையினையும் சமநிலைப் படுத்தி, கலாபூர்வமாக ஈழத்தினை வளர்த்தெடுத்துச் செல்லலாம் என்ற எண்ணத்தின் செயற்பாடாகவும் அமைந்திருந்தது.

இதனால் கண்காட்சியுடன்-எழுத்தாளர், கலைஞர் ஒன்றுகூடல், கலந்துரையாடல் (ஈழத்து இலக்கிய வளர்ச்சி எதிர் நோக்கும் பிரச்சினைகள்), கருத்தரங்கு (ஈழத்தில் கலை வளர்ச்சி) என்பவற்றையும் இணைத்துத் தம் நோக்கை பன்முகப்படுத்தியிருந்தனர் விழா அமைப்பாளர்கள். கலை இலக்கியங்கள் சமூகப்பயன்பாட்டில் கொள்ளும் இடமும் அவற்றின் முக்கியத்துவமும் இணைந்ததொரு செயற்பாடாக இது விளங்கியது.

முன்னாள் 'ஈழநாடு' பத்திரிகை ஆசிரியர் திரு. என். சபாரத்தினம் அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்து கொள்ள, பல்வேறு துறை சார்ந்த கலைஞர்கள் மங்கல விளக்கேற்ற விழா தீபாவளித் திருநாளில் ஆரம்பமாகியது.

காலை நிகழ்ச்சியில் கண்காட்சியே முக்கியத்துவம் பெற்றிருந்தது. அழைப்பாளர்களும், கலைஞர்களுமே பிரதான பார்வையாளர்களாக இருந்தனர். 'நூல்கள்' பகுதியில் ஈழத்தில் இதுவரை வெளிவந்த நூல்களில் பத்து சதவீதமே காணப்பட்டன. 'யாழ். நூலகம் எரியுண்டதால் அழிநத லட்சம் நூல்களும், ஷெல் அடிகளினால் மழையில் கரைந்து போன தனியாருடைய சேமிப்பு நூல்களும், இதற்குச் சாட்சியமாக நின்றன. கண்காட்சி 'இருப்பை' விட 'இழப்பையே' அதிகம் உணர்த்தியதால் வருகை தந்தோர் முகங்களில் 'மலர்ச்சி'யைவிட 'வறட்சி'யே மிளிர்ந்தது.

அதே வேளையில், கலாநிதி வே. இ. பாக்கியநாதன் மண்டபத்தில் இடமின்மையால் பலமுக்கிய நூல்களை காட்சியில் வைக்க முடியவில்லை என்று கூறிக் கொண்டிருந்தார். சச்சி மாஸ்டரோ தான் கொடுத்த அறுபது நூல்களில் ஒன்றைத்தானும் காணமுடியவில்லையே என்று, இன்னொரு பக்கம் ஆவேசத்துடன் தடவிக் கொண்டிருந்தார். அநு. வை. நாகராசன் தனது காட்டிலே ஒரு வாரம் சிறுவர் நாவல் புனைகதைப் பகுதியில் இடம் பெற்றிருப்பதை மாற்றியமைக்க, பொறுப்பாளர்களைத் தேடிக் கொண்டிருந்தார். வேறு சிலர் இந்தியாவில் அச்சான ஈழத்தவரின் முக்கிய நூல்களை அதிகம் காணவில்லை என்று, கவலைப் பட்டுக் கொண்டிருந்தனர். அவசரத்தில் அள்ளித்தெளித்த கோலமாக இருந்தாலும், இவ்வளவாவது செய்ய முடிந்ததே -அதுவும் இக்காலத்தில் என்ற திருப்தி அனைவர் உள்ளத்திலும் எழுந்ததை அவதானிக்க முடிந்தது. போதிய கால அவகாசம் அமைப்பாளர்களுக்கு இருக்கவில்லை என்பதை நன்குணரமுடிந்தது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் ஏலவே கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்த திரு. விசுவலிங்கம் அவர்களின் சிற்பங்களைச் சுற்றியும், இளம் கலைஞர் சதீஸின் சிற்பங்களைச் சுற்றியும் கூட்டம் குழுமி நின்று நகரமறுத்தது.

ஓவியக்கலைஞர்களான ஆ இராசையா, மாற்கு, சிவப்பிரகாசம், இராசரத்தினம், வாசுகி, தயா போன்றோரின் படைப்புக்கள் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்த்ததுடன் 'நம்மிடையே இத்தகைய ஆற்றல் மிக்க கலைஞர்களா!, என்று பார்வையாளர்களை வியக்க வைத்துக் கொண்டிருந்தன. 'ஓவியர் ரமணியின் படைப்புக்களை ஏன் காணமுடியவில்லை!' — என்று பல எழுத்தாளர்களும் கலைஞர்களும் பேசிக் கொண்டதைக் கேட்க முடிந்தது. இன்னொரு பகுதியில் 'ஏன் சிரித்திரன் ஆசிரியர் சிவஞானசுந்தரத்தின் படைப்புக்கள் இடம் பெறவில்லை. அவர் நோயுற்று இருப்பதால் இந்தக் கண்காட்சி அமைப்பாளர்கள் அவரில்லம் சென்று பெற்று வந்திருக்கலாமே?'— என்று ஒருவர் இரைந்து கொண்டிருந்தார். ஓவியக்கலைஞர் ஆ. இராசையா தனது எல்லாப் படைப்புகளையும் பார்வைக்கு வைக்க இடம் ஒதுக்கப்படவில்லை. மண்டப நெருக்கடி அப்படி என்று கூறினர்.

இந்தக் கண்காட்சியினால் உடனடியாக எல்லாருக்கும் தெரிய வந்த உண்மை என்னவென்றால் கலை நிகழ்ச்சிகளோ, இத்தகைய கண்காட்சிகளோ நடத்த யாழ். நகரில் ஏற்றதொரு மண்டபம் இல்லை என்பதுதான். தமிழன் உலகின் எப்பாகத்திற்குச் சென்றாலும் அங்கெல்லாம் தமிழுக்கென மண்டபம்— கட்டிடம் — கட்டி விடுபவன். தான் பிறந்த மண்ணில் தனது கலைகளுக்கென சொந்தமாக ஒரு கட்டிடம்தானும் இல்லாமலிருப்பது பற்றி ஏன் ஒருவர் மனதில் கூட இதுவரை உறைக்கவில்லை?

சிற்பம், ஓவியம் என்பனவற்றைப் பார்வையிட, வழிகாட்டிப் பிரசுரம் வழங்கப்பட்ட போதும், வழிகாட்டியிலுள்ள இலக்கங்கள் படைப்புகளில் காணப்படாததால் பெயர் மயக்கங்கள், தவறான கருத்துக்கள் எழ இடமாயிருந்தது. காரணம் கேட்டதற்கு நேரமின்மை என்று கூறப்பட்டது. ஆனால் இக்குறையை அடுத்த இரு நாட்களில் இல்லாமல் செய்திருக்கலாம். ஏனோ அலட்சியமாக இருந்து விட்டார்கள்.

குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் என்கின்ற ஒரு தமிழ் மகனின் தனிப்பட்ட 'தமிழரின் கலை, கலாசாரம், மொழி, இலக்கியம் பற்றிய திரட்டல் களஞ்சியம்' இடம்பெறாத தமிழ் மகாநாடுகளோ, தம்மை வைத்து அரசியல் நடாத்திய கட்சி மகா நாட்டுக் கூட்டங்களோ கடந்த முப்பதாண்டுகளாக இல்லை என்றே கூறல் வேண்டும் அந்தத்தமிழ்மகனைப் பார்த்தாலே தமிழ் உணர்ச்சி பொங்கும். டாக்டர் உ. வே. சாமிநாதையர் போன்று இன்னொருவகையில், இன்று வரை தொழிற்பட்டு வரும் தமிழ் உருவம். தனது முழுச் சேமிப்பையும் வைப்பதற்கு இம்முழு மண்டபமும் போதாது என்றுதான் அவரும் கூறினர்.

'கண்காட்சிக் கையேடு' ஒன்று இலவசமாக பார்வையாளர்களுக்கு வழங்கப்பட்டது. பயனுள்ள கையேடு; ஆனால் நிறையவே அச்சுப் பிழைகள். பிழை நீக்கிப் பொருள் காண எல்லாராலும் எப்போதும் முடிவதில்லை.

தீபாவளி அன்று பிற்பகல் 2.30 மணிக்கு திரு. சு. டிவகலாலா வரவேற்புக்கூறகலாநிதி எஸ். ஜெபநேசன் தலைமையில் எழுத்தாளர் – கலைஞர் ஒன்றுகூடல் ஆரம்பமாகியது. வரவேற்புரையில் திரு. சு. டிவகலாலா, இக்கண்காட்சியை ஏன் நடாத்தினர் என்பது பற்றி விரிவாக எடுத்துக் கூறினர். 'எமக்கு என்று ஒரு வரலாறு, கலை, கலாசாரம், பண்பாடு உண்டு. அவற்றினைப்பிரதிபலிக்கும் ஆக்கங்கள் ஊக்குவிக்கப்பட வேண்டும். ஓவியர்கள், சிற்பவல்லுனர்கள், கைத்திறனாளர்களுடைய ஆக்கங்கள் விலை கொடுத்து வாங்கப்பட வேண்டும். அதற்கான முன்னோடி நிகழ்ச்சியே இது'.

கலாநிதி எஸ். ஜெபநேசன் எழுத்தாளர்களின் ஆற்றல், அதனால் நாடுபெறும் நன்மை, புகழ், போன்றவற்றை பழந்தமிழ் நூல்களிலிருந்தும் மேனாட்டு நூல்களிலிருந்தும் எடுத்துக் கூறி, எழுத்தாளர்களை சுருத்து வழங்கும்படி கேட்டுக் கொண்டார். கருத்துரை வழங்க மூன்று நிமிடங்களே ஒவ்வொருவருக்கும் வழங்கப்படும் என்றும் கூறினர்.

திரு. சு. டிவகலாலா வரவேற்புக் கூறியதாலோ, இருநூறு பிரதிகள் ஒவ்வொரு நூலிலும் கொள்வனவு செய்ய இருப்பதாக தெரிவித்ததாலோ, பேசவந்த எழுத்தாளர்கள் எல்லாம் திரு. சு. டிவகலாலாவைப் புகழ் பாடவும் இருநூறு பிரதிகள் கொள்வனவு பற்றி பேரானந்தம் கொள்ளவும் தொடங்கிவிட்டனர்.

முதலில் பேசவந்த டொமினிக்ஜீவா, திரு. சு. டிவகலாலா தன்னை 'டேய்'! என்று அழைப்பதைப் பற்றி மெய்சிலிர்ந்தார்; புளகாங்கிதம் அடைந்தார்! பின்னர் இருபத்தைந்து ஆண்டுகளாகத் தான் செருத்தெருவாகக் கொண்டு திரிந்து, நண்பர்கள் கூட தன்னைக் கண்டால் திசை மாறிப் பதுங்கிச் செல்ல இன்று ஆயிரம் பிரதிகள் மல்லிகையை விற்பதாக, (திணிப்பதாக?) பெருமையடித்துக் கொண்டு, ஈழத்துப் பிரசுரங்களை 'மல்லிகைப் பந்தல்' மூலமாக நூல் வடிவில் கொணர்ந்து தான் ஈழத்துக் கலைஞர்களுக்குத் தொண்டாற்றுவதாகக் கூறிக் கொண்டார். (இடைவெட்டாக ஒன்று : 28 ஆம் திகதி இவ்வாறு கூறியவர் 30ஆம் திகதி மல்லிகைப் பந்தல் வாயிலாக வெளியிட்ட, சுதாராஜ் எழுதிய 'ஒரு நாளின் இரு மாலைப் பொழுதுகள்' சிறுகதைக்கோவையின் அட்டைப் படக் கலைஞர் யார் தெரியுமா? — ஆனந்த விகடன் புகழ் மருது. சொல்வது ஒன்று; செய்வது மற்றொன்று!). 'இனி நூல்கள் ஆயிரம் பிரதிகள் அடித்துக் காணாது. இரண்டாயிரம் பிரதி அடிக்கவேணும். இருநூறு பிரதிகளை உள்ளூராட்சி வாங்கும். நானூறு பிரதிகளை அமைச்சர் தேவராஜ் வாங்குவார். இன்னொரு நானூறு பிரதிகளை மாகாண கலாசார அமைச்சு வாங்கும். நாங்கள் எழுத்துச் சீர்திருத்தம் செய்தால் தமிழகம் நானூறு பிரதிகள் வாங்கும். பிறகென்ன? நாங்கள் தலைநிமிர்ந்து நடக்கலாம்' என்று மடம் கட்டிக் கொண்டார்.

சாரல் நாடன் மலையக இலக்கியவாதிகளையும் அவர்கள் தம் படைப்புக்களையும் சேர்த்துக் கொள்ள வேண்டும் எனக், கேட்டுக்கொண்டார்.

செங்கை ஆழியான் 'ஈழத்திலுள்ள எல்லா எழுத்தாளர் சங்கங்களும் வேற்றுமைகளைக் களைந்து ஒன்றாகினால் ஈழத்து இலக்கியம் சிறக்கும்' — என்றார்.

மாற்கு அவர்கள், ஓவியர்கள், சிற்பவல்லுனர்கள் மிகக் குறைவு என்றும் அவர்களுக்கு பயிற்சி அளித்தும், அவர்கள் படைப்புக்களை நல்ல விலைக்கு விற்றுக்கொடுத்தும் ஊக்கமளிக்கவேண்டும் என்றும் கூறியதோடு, எல்லாவற்றிற்கும் மேலாக நல்ல கட்டிட வசதி வேண்டும் எனக் கூறினர்.

திரு. எஸ். சிவலிங்கராசா ஈழத்தில் புகைப்படக் கலை பற்றியும், திருமதி கோகிலா மகேந்திரன் தமிழில் அறிவு நூல்கள் வெளிவரவேண்டும் என்றும் கூற, திரு. குழந்தை ம. சண்முகலிங்கம் அவர்கள் பல நல்ல திட்டங்களை சுருக்கமாக முன்வைத்தார். நாடக அரங்கு பற்றியதாக அவரது கருத்துக்கள் இருந்தன.

புலவர் ஈழத்துச் சிவானந்தன், திரு. என். பேரின்பநாதன் போன்றோர் இருநூறு பிரதிகள் கொள்வனவு பற்றி கருத்துக் கூறினர்கள்.

சபையோர் குறிப்புரையின் போது மீண்டும் பேச வந்த திரு. சு. டிவகலாலா நீண்ட நேரம் எடுத்துக் கொண்டார்.

29ஆம் திகதி காலை 10 மணியளவில் ஈழத்து இலக்கிய வளர்ச்சி எதிர்நோக்கும் பிரச்சினைகள் என்ற தலைப்பில் பல எழுத்தாள நண்பர்கள் பேசினர்கள். பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமை வகித்தார். இவர் தமது தலைமையுரையில் கலாநிதி சபா. ஜெயராசாவின் கருத்தொன்றினை வரவேற்றுப் பேசினர். இன்றைய ஈழத்தின் புனைகதைகளில் விவரணப்பாங்கே மேலோங்கி நிற்கிறது. Anti - Fiction வகையின என்று கூறியவர், இருநூறு பிரதிகள் வாங்கப்பட இருப்பதால், தனது இல்லத்தில் நிறைந்திருக்கும் அச்சிட்ட பிரதிகள் குறையப் போகின்றன என மகிழ்ந்தார்.

சோ. பத்மநாதன், கலாநிதி சபா. ஜெயராசா, நெல்லை க. பேரன், சாரல் நாடன் போன்றோர் ஈழத்து இலக்கியத்தின் பண்புகள் பற்றியும், அவற்றின் அம்சங்கள் பற்றியும் பேசினர்கள், ஆனால் எல்லாரும் ஏனோ சாதுர்யமாக ஈழத்து இலக்கிய வளர்ச்சி எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றிப் பேசமறந்து போயினர்; அல்லது மறைத்துப் போனது திகைப்பானது.

செம்பியன் செல்வன் இப் பிரச்சினைகள் பற்றிப் பேசும் பொழுது 'பிரச்சினையை-

(13ஆம் பக்கம் பார்க்க)

இக் கட்டுரை பற்றிய சுருக்கமான கருத்துக்களை வாசகரிடமிருந்து எதிர்பார்க்கிறோம்,

— ஆர்.

## நாடகம்

# ஆசியாவின் ஓலம்

பிலிப்பைன்ஸ் நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட ஆசிய, பசிபிக் மக்கள் கலாசார ஒருங்கிணைப்புக் குழு (ACPC) 'கிறை ஓவ் ஏசியா' எனும் இசை - நாட்டிய-நாடக நிகழ்ச்சியுடன் உலகச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு இப்போது மேற்கு ஜேர்மனிக்கு வந்துள்ளனர். பல நகரங்களிலும் மேடையேறிய இந்நிகழ்ச்சி மேற்கு ஜேர்மனியில் இறுதியாக செப்ரெம்பர் 21, 22 ஆம் திகதிகளில் மேற்கு பேர்லினில் மேடையேறியது. அதன் பின் ஒஸ்ரியா, ஹொலண்ட் நாடுகளில் இந்நிகழ்ச்சி நடைபெறவுள்ளது.

இந்த இசை-நாட்டிய - நாடகத்தில் பங்குபற்றும் கலைஞர்கள் பிலிப்பைன்ஸ், தென்கொரியா, மலேசியா, தாய்லாந்து, இந்தோனேசியா, இலங்கை, ஒ அரியோஆ, பாகிஸ்தான், இந்தியா, யப்பான் ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். அனைவரினதும் கூட்டு முயற்சியில் இந்நிகழ்ச்சி உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்ச்சியில் பொதுமொழியென்று ஏதும் இல்லை. ஒவ்வொரு கலைஞரும் தனது மொழியிலேயே தனக்குரிய பகுதியைக் கதைக்கிறார் அல்லது பாடுகிறார். உதாரணமாக இலங்கைக் கலைஞர் தமிழிலும் தென்கொரியக் கலைஞர் தனது மொழியிலுமே உரையாடுகிறார்கள்.

ஒவ்வொரு கலைஞரும் தங்களுடைய கலாசாரப்படி உடையணிந்து, தங்களது பாரம்பரிய ஆட்டங்களையே ஆடி, பாரம்பரிய இசையையே இசைக்கிறார்கள்.

இந் நிகழ்ச்சியில் 4 பாத்திரங்களுக்கு மட்டுமே பெயர் சூட்டப்பட்டுள்ளது.

இனூஓ — பூசாரி.
மினோகாவா — பலம்வாய்ந்த தீய பறவை.
நூனோ — மண்ணிலிருக்கும் நல்ல தேவன்.
சுவானோ — கிராமத்து இளம்பெண்.

ஏனைய பாத்திரங்கள் பெயரிடப்படாமல் சமூகமாகவும், பறவைகளாகவும், தீய ஆவிகளாகவும் பங்காற்றுகிறார்கள்.

### காட்சி 1 :

மேடையின் பின்பகுதியில், மத்தியிலே ஒரு திரைச்சீலை தொங்கவிடப்பட்டுள்ளது. அதில் பிரம்மாண்டமானதாக பிரகாசிக்கும் சூரியன் வரையப்பட்டுள்ளது. மேடையின் இரு மருங்கிலும் ஆசியநாட்டு வாத்தியங்கள் வைக்கப்பட்டுள்ளன.

அரங்க விளக்குகள் அணைந்ததும், வெளியே இருந்து சணீரென்ற குரல் ஒலிக்கிறது. "சே ஆ, சே ஆ" (பறவைகளே, பறவைகளே) என்று பாடியபடி வெள்ளை அங்கி அணிந்த ஒருவர் கையில் மெழுகு திரியுடன் முன்னே வருகிறார். அவர் பின்னே வரிசையாக தங்கள் கலாசார உடைகளை அணிந்திருந்த கலைஞர்கள் மௌனமாக, கையில் காகித அட்டைகளைத் தாங்கியபடி ஊர்வலமாக வருகிறார்கள்.

மேடையில் ஏறியதும் வெள்ளை அங்கி அணிந்திருந்தவர் மெழுகுதிரியை மத்தியில், தரையிலே வைத்துவிட்டுத் தொடர்ந்து பாடுகிறார். அவர் பின்னே வந்தவர்கள் மேடையில் ஏறி நீளப்பாட்டுக்கு வரிசையாக நின்று கொள்கிறார்கள். இப்போது அவர்கள் கையில் வைத்திருந்த அட்டைகள் துல்லியமாகத் தெரிந்தன. ஒவ்வொரு நாட்டவர்களும் வைத்திருந்த அட்டைகளில் அவர்களின் நாடுகளின் பெயர்கள் குறிக்கப்பட்டு, அந்தந்த நாடுகளில் மனித உரிமைகள் மீறப்படுவது ஓவியங்களாக வரையப்பட்டிருந்தது. இடமிருந்து வலமாக ஒ அரியோஆ, பாகிஸ்தான், இநதோனேசியா, யப்பான், பிலிப்பைன்ஸ், இலங்கை, இந்தியா, தென்கொரியா, மலேசியா, தாய்லாந்து நாட்டவர்கள் அட்டைகளை வைத்திருந்தார்கள்.

வெள்ளை அங்கியுடன் நின்றவர், கையில் வைத்திருந்த காகிதத்துண்டை வாசிக்கிறார். ஆசிய, பசுபிக் நாடுகளின் பெயர்கள் வாசிக்கப்படுகின்றன. பின் அக்கடதாசியை எரிந்துகொண்டிருந்த மெழுகு திரியில் பிடித்து தீயிட்டு, சாம்பலாக்கி, காற்றில் பறக்க விடுகிறார். அவர் பாட மற்றவர்களும் சேர்ந்து பாடுகிறார்கள். பிறகு மண்டியிட்டு வணக்கம் தெரிவிக்கிறார்கள்.

### காட்சி 2 :

மேடையின் ஒரு பக்கத்திலிருந்து ஒருவர் ஆர்மோனியம் வாசித்துக்கொண்டு பாட, மறுபக்கத்தில் ஒருவர் புல்லாங்குழல் இசைக்கிறார். தேவதையொன்று வந்து சூரியனின் முன் நடனமாடுகிறது.

### காட்சி 3 :

ஆண்கள் குழாமொன்று அம்பு, வில்லு ஈட்டிகளுடன் வந்து வேட்டையாடுகிறது. அவர்கள் ஆடிப்பாடி சந்தோசமாக வேட்டையாடுகிறார்கள். சில நிமிடங்களின் பின் பெண்கள் குழாம் வந்து வயலில் வேலை செய்கிறது. அவர்களும் தங்களுக்குள் கதைத்துச் சிரித்து உற்சாகமாக வேலை செய்கிறார்கள்.

வேட்டையாடிக் கொண்டிருந்த ஆண்கள் குழுவினர் ஒரு கொழுத்த வேட்டையைப் பெற்றுக்கொண்டு விட்டார்கள். அதைச் சுமந்து வந்து வயலில் வேலை செய்து கொண்டிருந்த தங்கள் மனைவியருக்குக் காட்டிச் சந்தோசப்பட்டுக் கொண்டிருக்கும் பொழுது வெளியேயிருந்து கூச்சல் வருகிறது.

ஆண்கள் குழுவில் ஒருவர் முன்னால் வந்து "பூசாரியார் இனூஓ வாறார். படு கிழவன். எங்களுக்கு அவர் பகிடிக்காற பூசாரியார். ஊரில எல்லாக் காரியங்களுக்கும் வருவார்" என்று சொல்லிச் சிரிக்கிறார்.

எல்லோரும் சிரித்தபடி தெருவைப் பார்க்க, வயது போன பூசாரியார் நொண்டியடி, கைத்தடியை ஊன்றிக் கொண்டு வருகிறார். அவர் தனக்குத்தானே பெரிதாக கதைத்தபடி நடந்து வருகிறார்.

அவரின் பின்னால் கையாள், வளைந்து, நெளிந்தபடி பெரிய தட்டொன்றைச் சுமந்து கொண்டு வருகிறான்.

ஆண்கள் குழுக்கள் தங்களின் வேட்டையைப் பூசாரிக்கு காட்டிச் சந்தோசப்பட, பூசாரி தனது கையாளுக்கு கட்டளையிட, அவன் தான் கொண்டுவந்த தட்டில் அவர்களின் வேட்டையின் பெரும் பகுதியை எடுத்துப் போட்டுக் கொள்கிறான். பூசாரி அவர்களுடன் கதைத்துச் சிரித்து அவர்களுடைய வேட்டைக்குப் பாராட்டிவிட்டு திரும்பிப் போகிறார்.

அவரின் கையாள் வயலில் வேலை செய்த பெண்களிடமும் ஒரு பங்கை வாங்கித் தட்டில் போட்டுக் கொண்டு வளைந்து, நெளிந்து செல்கிறான்.

அவர்களின் செய்கைகள் தங்களுக்குப் பிடிக்காததை ஆண்கள்குழு நையாண்டி செய்து சிரிக்கிறது. பிறகு எல்லோரும் ஒன்றாகச் சமைத்துச் சாப்பிடுகிறார்கள். அவர்களில் ஒருவர் ஆடிப்பாடி அவர்களை மகிழ்விக்கிறார்.

"அந்தநாளிலே இந்த மனிதர்கள்
அனைவரும் சமமுடன் வாழ்ந்தனரே.
அப்பொருள் எனது, இப்பொருள் உனது
என்ற பேதங்கள் தோன்றவில்லை.
பெரியவர், சிறியவர், வறியவர், உடையவர் பேதமில்லை.
இது புராதன காலப் பொதுவுடமை."

அவரின் பாட்டுக்கு மற்றவர்கள் 'தகதிமி, தகதிமி' என்று சந்தமிசைக்கின்றனர். எல்லோரும் சாப்பிட்டு முடித்ததும் "இனிச் சாமி கும்பிடப் போறோம்" என்று சொல்கிறார். எல்லோரும் தங்கள் தங்கள் சமய முறைப்படி வணங்குகிறார்கள். அவர்கள் முன் தேவதை தோன்றி நடனமாடுகிறது.

### காட்சி 4 :

சுவானோ என்ற இளம்பெண் தனியே ஆடிப்பாடி மகிழ்ந்து கொண்டிருக்கிறாள். திடீரென ஆடுவதை நிறுத்தி, தரையில் அமர்கிறாள். இடுப்புக்குக் கீழே, உடைகளில் இரத்தம் வழிவதைப் பார்த்து பயந்துபோய் அலறுகிறாள்; அழுகிறாள்.


இவளின் சத்தம் கேட்டு தாயார் ஓடிவருகிறாள். மகள் பெரியவளானதையறிந்து சந்தோசப்படுகிறாள். தனது சேலையை மகளுக்கு அணிவிக்கிறாள். பிறகு ஏனைய குடும்பங்களுக்கும் செய்தியைத் தெரிவிக்கிறாள். பூசாரியை அழைத்துவர ஆள் போகிறது.

பூசாரியார் தனக்குள் கதைத்தபடி, தடியூன்றி வருகிறார். பெரியவளான சுவானோவுக்கு சமய முறைப்படி சடங்குகள் செய்து வைக்கிறார். சுவானோ எதுவும் புரியாமல் பயந்துபோய் பெற்றோர் சொல்லுக்குக் கட்டுப்பட்டு பேசாமலிருக்கிறாள்.

சடங்கு முடிந்ததும் பூசாரியின் கையாள் கூலி கேட்கிறான். சுவானோவின் தாயார் தன்னிடம் எதுவுமில்லையென்று சொல்ல, அவள் போட்டிருந்த ஆபரணமொன்றை அவன் பிடுங்கிச் செல்கிறான். இதனால் அவர்கள் கோபமடைகிறார்கள்.

இதன் பின்னர் சுவானோவின் தாயாரும், இன்னொரு பெண்ணும் தங்களுக்குள் புதுச் சேலைகளைப் பரிமாறிக் கொள்கிறார்கள். தாங்கள் பரிமாறிக்கொண்ட சேலைகளைத் தங்கள் உறவினர்களுக்குக் காட்டி மகிழ்கிறார்கள்.

சுவானோவுக்கு திருமணம் பேசப்படுகிறது. சேலை பரிமாறிக்கொண்ட பெண்ணும், அவள் கணவனும் தங்கள் மகனை அழைத்து வருகிறார்கள். அவனோ விபரம் புரியாமல் மறுக்க, பெற்றோர் வற்புறுத்தி சம்மதிக்க வைக்கிறார்கள்.



இடமிருந்து வலமாக மூன்றாவதாக நிற்பவர் ஈழக் கலைஞர் க. சிதம்பரநாதன்.

இளைஞன் சுவானோ அருகில் வந்து புல்லாங்குழல் இசைக்கிறான். இருவரும் சேர்ந்து நடனமாடுகிறார்கள். அப்போது அவர்களின் குடும்பத்தவர்களும், உறவினர்களும் வந்து ஆடிப்பாடி மகிழ்கிறார்கள். சுவானோவுக்கும் இளைஞனுக்கும் திருமணம் செய்து வைக்கிறார்கள்.

புதுத் தம்பதிகள் குடும்பம் நடத்த ஆரம்பிக்கிறார்கள். சுவானோ முதலில் வெட்கமடைந்தாலும், கணவன் பின்னர் எல்லாம் சொல்லிக் கொடுக்கின்றான்.

ஒரு கர்ப்பிணிப்பெண் வருகிறாள். அவள் கணவன் செய்தியறிந்து சந்தோசப்படுகிறான். உறவினர்களும் மகிழ்ச்சியடைகிறார்கள். இவர்கள் புதுத்தம்பதிகளிடம் வருகிறார்கள். சுவானோவும் கர்ப்பமாயிருப்பதை அறிந்து சந்தோசப்படுகிறார்கள்.

### காட்சி 5 :

பூசாரி நொண்டியபடி நடந்து வந்து தரையில் அமர்கிறார். தனது ஊனமான காலைப் பார்த்து கவலைப்படுகிறார். அப்போது 3 பேய்கள் வந்து ஆட்டம் போடுகின்றன. பூசாரியின் கைத்தடியைப் பறித்து எறிகின்றன. அவரின் தட்டைத் தூக்கி வீசுகின்றன. பூசாரி மிரண்டுபோய் அழுகிறார்.

திடீரென ஒரு பேய் தனது தலையிலிருக்கும் 'முடி'யைக் கழற்றி பூசாரியின் தலைக்குச் சூட்டப் போவதுபோல் ஏமாற்றிக் கொண்டிருக்கிறது. பூசாரி பயம் நீங்கி வியப்படைகிறார். பேய்கள் அவரை ஆற்றின் மீது நடந்துவரச் செய்கின்றன. அப்படி அவர் நடந்து வரும்போது ஆறு இரத்தமாக மாறுகிறது. இதுவரை பிரகாசித்துக் கொண்டிருந்த சூரியன் மறைந்து, கருமை நிறமாகிறது. பேய்கள் பூசாரிக்கு முடி சூட்டிவிடுகின்றன.

இதனால் மினோகாவா என்ற தீய பறவைக்கு அக்கிராமத்தின் வாசல்களைத் திறந்துவிட, பூசாரி சம்மதிக்கிறான்.

அப்போது அந்தவழியால் வந்த சுவானோ பூசாரியின் துரோகத்தைக் கண்டு அலறியபடி ஓடுகிறாள். பூசாரி மினோகாவாவுக்கு கீழ்ப்படிந்த திருப்தியில் பேய்கள் மறைகின்றன.

பூசாரி தன்னுடைய ஊனமான கால் குணமானதை அறிந்து சந்தோசப்பட்டு ஆர்ப்பரிக்கிறார். காலைக் குணப்படுத்திய மினோகாவாவுக்கு நன்றி சொல்கிறார். பிறகு ஏதோ ஒரு திட்டத்துடன் கைத்தடியை எடுத்துக் கொண்டு நொண்டுவது போல் பாசாங்கு செய்தபடி நடக்கிறார்.

(அடுத்தவாரம் முடிவுறும்)

# பெண்ணை இழிவு படுத்தும் விளம்பரங்கள் தேவையா?



மைதிலி அருளையா

சினிமா விளம்பரங்களிலும், தொலைக்காட்சியில் காட்டப்படும் விளம்பரத் துண்டுப் படங்களிலும் பெண்களைக் கவர்ச்சிப் பொருளாகவும், கண்ணியக்குறைவாகவும், எல்லா வயதுடையோரும் பார்க்கக் கூடிய வகையில் காட்சிப் பொருளாகவும் காட்டுகிறார்கள்.

ஆபாசம் என்பதும் கண்ணியக்குறைவாகக் காட்சியளிப்பது என்பதும் வேறுதான். ஆனால், இரண்டிற்குமிடையே உள்ள வேறுபாட்டை இனம் பிரித்துக் காட்டும் எல்லைக் கோடு என்பது மிக நுண்ணியமானது. இதை ஒரு சாக்காகக் கொண்டு பல வியாபாரிகள் பெண் உருவங்களை விளம்பரப் பொருளாகப் பயன்படுத்துகின்றனர்.

இப்படிப் பெண்களை விளம்பரங்களில் பயன்படுத்துவதில் கூட அநேக விளம்பரங்கள் பொருத்தமாயிருப்பதில்லை!

சோப்பு, பவுடர், கூந்தல் தைலம், வீட்டுப்பொருட்கள் விஷயத்தில் பெண்களைக் காண்பிப்பதில் ஓரளவு நியாயம் இருக்கத்தான் செய்கிறது. அதிலும் சவர்க்கார விளம்பரங்களில் பெண்கள் அருவிகளிலும் ஷவர்களிலும் குளித்துக் கொண்டிருப்பதை, எல்லோர் கவனமும் திரும்பும் வகையில் காட்டுகின்றனர். இதைப் பார்க்கையில் ஒரு வேளை ஆண்கள் யாரும் சவர்க்காரம் தேய்த்துக் குளிப்பது குறைவோ என்று வேடிக்கையாக எண்ணத் தோன்றுகிறது.

ஒரு குளிர்சாதனப் பெட்டி (Fridge) விளம்பரகாரர்களின் விளம்பரங்களில், ஒரு ஆண் தோன்றுவார். 'என் வாழ்க்கையில் இரண்டு விஷயங்களில் மாறுதலே கிடையாது. ஒன்று இந்த Fridge. மற்றொன்று இதோ என் மனைவி' என்பன போன்ற வாக்கியங்களை உதடுகளால் கடித்துத் துப்புவார்.

மனைவியும், Fridge உம் ஒன்றா? கணவனிற்குச் சுமையளித்து, அவன் நல்வாழ்விற்காகப் பாடுபடும் பெண்ணும், ஒரு உயிரற்ற, மின் சக்தியால் இயங்கும் குளிர்சாதனப் பெட்டியும் ஒன்றா? இதென்ன கதை? விளம்பரத்திற்கு ஒரு உருப்படியான வாக்கியம் இல்லாமலா போய்விட்டது?

ஒரு குளிர்பான விளம்பரத்தில், நீச்சல் உடையில் பெண்கள் கடலில் குதித்து விளையாடி, குளிர்பானம் அருந்துவதுபோல் 'கவர்ச்சி' யாகக் காட்டப்படுகிறது. காட்சிக்கும், குளிர்பானத்திற்கும் என்ன சம்பந்தம்?

ஒரு கைக்கடிகார விளம்பரம் ஒன்றில் அரை நிர்வாணப் பெண்ணொருத்தி அப்பிள் கடித்துச் சுவைத்துச் சாப்பிடுவது போல் காட்டப்படும். கைக்கடிகாரத்திற்கும், கவர்ச்சிப் பெண்ணுக்கும், அப்பிள் கடிபடுவதற்கும் என்ன சம்பந்தம்? எந்த வகையில் சம்பந்தம்?

இன்னும் சில விளம்பரங்களில் பெண்களை மொடலாகக் காட்டுவதுபோல் கவர்ச்சியை மட்டுமே வெளிக் காட்டுகிறார்கள். அதனால், விளம்பரப் படுத்தப்படும் பொருளையே மறக்கடிக்கச் செய்து விடுகிறார்கள்.

பெண்களுக்கு மட்டுமே தேவைப்படும் சில பொருட்களை விளம்பரங்கள் மூலம் எல்லோருக்கும் போட்டுக் காட்டி, அவர்களின் மறைமுகத் தேவைகளைக் கூடப் பகிரங்கப்படுத்துகிறார்கள்.

ஒரு பிரபல வங்கி 'உங்கள் பெண்குழந்தையின் திருமணத்திற்காக அவள் குழந்தையாக இருக்கும் போதிலிருந்தே சேமியுங்கள்' என்று அறிவிக்கிறார்கள். இதன்மூலம் பெண் குழந்தைக்கு வரதட்சணை, சீர் போன்றவைகள் கட்டாயமென்ற ஒரு பிரமையை இந்த விளம்பரம் ஏற்படுத்துகின்றது! ஆனால், ஆண் குழந்தையைப் பெற்றவர்களுக்கு இப்படிச் சேமிக்க வேண்டிய அவசியமே இல்லை என்பதையும் இந்த விளம்பரம் மூலம் கோடி காட்டுகிறார்கள்.

இப்படி ஒவ்வொன்றையும் சொல்லிக் கொண்டே போகலாம். சில பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்னடாவென்றால், தாங்களும் இதற்குச் சளைத்தவர்களல்லஎன்குமாப்போல்பல விளம்பரங்களை வெளியிடுகிறார்கள். ஆனால், இது மாதிரி பெண்களை விளம்பரத்தின் மூலம் இழிவு படுத்துவதற்கு நாடெங்கிலுமுள்ள பெண்விடுதலை இயக்கங்கள் எதிர்ப்புத் தெரிவித்துக் கெண்டுதான் இருக்கின்றன; இருந்தும் இது தொடர்கதையாக நடந்து கொண்டிருக்கிறதே.

உதவி : ராஜம் □

---

# சிந்தனை மேடை — 2
## புலம் பெயரும் ஈழத் தமிழர்

# பொருளாதார முன்னேற்றம்
## ஒரு போலியான நிகழ்வு

பா. சுதர்சன்

**6**

இலங்கையில் 1977 இல் ஆட்சிக்குவந்த ஐ.தே.க. அரசு அதன் திறந்த பொருளாதாரக்கொள்கையின் அடிப்படையில் வெளிநாட்டு வேலை வாய்ப்புக்கான ஒரு சந்தர்ப்பத்தை அளித்தது. இதன் மூலம் அன்றைய காலகட்டங்களில் வடக்குக் கிழக்குத் தமிழர்களில் சிலர் மட்டும் வெளிநாட்டு வேலை தேடல்களில் ஈடுபட்டனர். ஆனால் 1983 இல் ஏற்பட்ட இனக்கலவரத்தின் பிற்பட்ட காலப்பகுதியில் வெளிநாடுகளில் இருந்து தமிழர்களுக்கு நீட்டப்பட்ட நேசக்கரமும், உள்நாட்டில் இளவயதினருக்கு ஏற்பட்ட பாதுகாப்பின்மையும், வெளிநாட்டுக்கு புலம்பெயர்பவரின் எண்ணிக்கையை படிப்படியாக அதிகரித்துவந்தது ஆனால் 1986 இன் பின்னர் நாட்டில் ஏற்பட்ட திடீர் அரசியல் நிகழ்வுகளினால் இப்புலம் பெயர்வு பெருமளவில் அதிகரித்திருக்கின்றது என்பது தெளிவானது. இதனால் ஏற்படும் விளைவுகள் பற்றி மக்கள் மத்தியில் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவது ஓர் வரலாற்றுக்கடமையாகும்.

அண்மைக்கால இராணுவ அழிவுகளினால் பொருளாதார ரீதியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள வடக்குக் கிழக்கு மக்களைப் பொறுத்தவரை, அவர்கள் புலம்பெயர்ந்த அந்தந்தக் குடும்ப உறுப்பினர்கள் அனுப்புகின்ற பணத்தினால் வறுமையின் கோரப்பிடியில் சிக்காது தப்புகின்றனர் என்பது, உண்மையானது. அந்தவகையில் எம்மக்கள் புலம்பெயருபவர்களினால் ஓர் பொருளாதார நன்மையை அடைகின்றனர் என எண்ணத்தோன்றினாலும், நீண்டகால நோக்கில் சிந்திப்போமாயின் பல உண்மைகள் எமக்கு தெளிவாகும். பிரிட்டன், கனடா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா போன்ற நாடுகளுக்குப் புலம்பெயருபவர்கள் அந்தந்த நாடுகளின் குடியுரிமையைப் பெற்றுவிடுகின்றனர். இதன் விளைவாக அவர்களைச் சார்ந்த குடும்பத்தினரும் அந்தந்த நாடுகளைச் சென்றடைகின்றனர். இதனால் புலம்பெயர்ந்தவர்கள் அனுப்பிய பணம் இந்த நாட்டில் முதலீடு செய்யப்படாது, அந்நிய நாடுகளுக்கு எடுத்துச் செல்லப்படுகிறது. அத்துடன் மேற்படி குடும்பத்தினரின் அங்கத்தவர் புலம்பெயர்வதற்கு முந்திய காலத்திய விவசாய, வர்த்தக முதலீடுகளும் இங்கிருந்து எடுத்துச் செல்வதனால், வடக்குக் கிழக்கின் பொருளாதாரம் நீண்ட காலப்போக்கில் பெரிதும் பாதிக்கப்படப்போகின்றது என்பது உண்மை. 1993 ஆம் ஆண்டளவில் ஐரோப்பிய பொருளாதார சமூகத்தில் ஏற்படப்போகும் திறந்த சந்தையானது, ஏனைய மேற்கு நாடுகளிலிருக்கும் எம்மவரின் இந்நாட்டிலுள்ள முதலீடுகளையும் இங்கிருந்து அகற்றிவிடும் என்பதில் சந்தேகமில்லை. இவ்வாறான புலம்பெயர்வுகள் பெரும்பாலும் உழைக்கும் வயதிலான பெயர்வாக இருப்பதனால், எமது பிரதேசத்தின் மனிதவளம் பெரிதும் பாதிக்கப்படுகின்றது. இதனால் புதிய தொழில் முயற்சிகள் எதுவும் மேற்கொள்ள முடியாத நிலை ஏற்படுகிறது. எனவே மொத்தத்தில் புலம்பெயர்வதனால் ஏற்படும் பொருளாதார முன்னேற்றம் என்பது எமது பிரதேசத்தைப் பொறுத்தவரை ஒரு போலியான நிகழ்வு என்பது வெளிப்படை.

அரசியல் நிகழ்வுகளைப் பற்றிச் சிந்திக்கின்றபோது இப்புலம்பெயர்வு மிகப்பயங்கரமானதாகிறது. எமது மண் இனவாதிகளினால் ஆக்கிரமிக்கப் பட்டுக்கொண்டிருக்கும் இத்தருணத்தில், எமது இன்றைய வளமான சந்ததியினராகிய இவர்களும் இவர்களின் வருங்காலச் சந்ததியினரும் இங்கிருந்து அகற்றப்படுவதனால் ஏற்படும் திடீர் இடைவெளி, ஆக்கிரமிப்பாளர்களினாலேயே நிரப்பப்படும். இதனால் எமது தாயகமண் மேலும் பறிபோகும். இப்புலம்பெயர்வு எமது சனத்தொகையில் ஏற்படுத்தும் வீழ்ச்சியானது, இந்நாட்டில் அரசியல் ரீதியான முடிவுகளை எடுப்பதிலான எம் இனத்தின் முக்கியத்துவத்தை எம்மிடமிருந்து பறித்துவிடக் கூடிய அபாயம் ஒன்றை, ஏற்படுத்தியுள்ளது. எமது நாட்டில் தமிழர்களுக்கு ஏற்படும் துன்பங்களை உலகுக்கு எடுத்துக் காட்டுவதிலும் எமது இனவிடுதலைக்கான போராட்டங்களை முன்னெடுக்கும் இயக்கங்களுக்கான நிதியுதவியிலும் இப்புலம்பெயர்வாளர்கள் கணிசமான பங்களிப்பை செலுத்தியிருந்த போதிலும் முன்னைய அரசியல் காரணிகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் இவை முக்கியத்துவம் அற்றுப் போகின்றன,

வடக்குக் கிழக்குப் பகுதிகளிலிருந்து பல்கலைக்கழகம் புகும் மாணவர்களில் கணிசமான தொகையினர் பல்கலைக்கழகப்படிப்பை முற்றாக விடுத்தோ, அன்றி இடைக்காலப் பகுதியில் விடுத்தோ, அல்லது பல்கலைக்கழகத்தை விட்டு வெளியேறிய பின்னரோ எமது பிரதேசத்தைவிட்டு வெளியேறுகின்றனர். குறிப்பாக மருத்துவ, பொறியியல், விவசாய பீடமாணவர்களின் வெளியேற்றம் அதிகமாக உள்ளது. இது மூளைசாலிகளின் வெளியேற்றம் என்றே கொள்ளப் படவேண்டும். தொழில்நுட்ப திறனுடை இளைஞர்களும் யுவதிகளும் கூட, பெருமளவு வெளியேறி வருகின்றனர். இவ்வாறு வெளியேறுபவர்கள் திரும்பி வருவார்களானால் மூளைவிசாலிப்படைகிறது எனலாம். ஆனால் அது சாத்தியமற்றது என்பது எமக்கு வரலாறு தந்த பாடமாகும். (புலமைப்பரிசில் பெற்றுச் செல்வோர் மீண்டும் வருவதில்லை).

கலாசாரம் என நோக்கினால் மேலை நாடுகளுக்குச் செல்லும் இளம் சந்ததியினர் திடீரென ஒரு புதிய சூழலுக்குள் தனித்து விடப்படுகின்றனர். இவர்கள் அங்குள்ள பெரும்பான்மையினரின் அபிலாசைகளுக்கு ஒத்துப்போக வேண்டியுள்ளதால், விரும்பியோ விரும்பாமலோ ஓர் கலாசார மாற்றத்திற்கு வலிந்து தள்ளப்படுகின்றனர். இவர்கள்படிப்படியானபரிணாம வளர்ச்சியினூடாக அக்கலாசாரத்தை அடையாமல் திடீரெனத் தள்ளப்படுவதனால், ஒரு மனநிலைக் குழப்பத்திற்குள்ளாவர். இவர்களில் சிலர் இங்கு மீண்டும் வருகையில், இப்பிரதேசத்தின் கலாசாரத்தில் ஏற்படும் படிப்படியான பரிணாமவளர்ச்சியைக் குறிக்கீடு செய்யும் களைகளாகவே இருப்பர். இவர்களினால் இங்கு பரப்பப்படக் கூடிய போதைப் பொருள் பாவனையும், மேற்கத்திய பாலியல் சிந்தனைகளும் எமது கலாசாரத்தைச் சீரழிக்க வாய்ப்புண்டு.


அந்நிய நாடுகளிலிருந்து இங்கு மீண்டும் வருபவர்கள் பல்வேறு நோய்க்காவிகளாக இருக்க வாய்ப்புண்டு. குறிப்பாக எயிட்ஸ் போன்ற நோய்களையும், ஆபிரிக்கப் பகுதிகளில் வேலைதேடுவோர் வேறு சில நோய்களையும் (மஞ்சட் காய்ச்சல்) இங்கு பரப்பக்கூடும். மற்றும், முற்குறிப்பிட்ட மருத்துவர் வெளியேற்றமும் இங்குள்ளவரின் ஆரோக்கிய வாழ்வைப் பெரிதும் பாதிக்கும்.

எனவே மொத்தத்தில், ஓர் அங்கி பாதகமான சூழல் நிலைமை காணப்படும் ஓர் இடத்தில் இருந்து சாதகமான சூழல் நிலைக்குப் புலம்பெயரும் என்பது இயற்கை நியதி என்றாலும் கூட, எமது பிரதேசத்தை – எமது தாயகத்தைப் – பொறுத்தவரை இப்புலம் பெயர்வு இனிவரும் காலங்களில் எமது இனத்திற்கும் எம் மண்ணிற்கும் மிகப்பாரிய தாக்கத்தை ஏற்படுத்தப்போவது மட்டும், உண்மையாகும். □

# இந்தியத்தேர்தல்— வெற்றி யாருக்கு?

## இன்றைய தேர்தல் களம்

உலகிலேயே மிகப் பெரிய, எல்லா நாடுகளின தும் கவனத்தை ஈர்த்துள்ள, ஜனநாயக விழுமியங்களை அடிப்படையாகக் கொண்ட தேர்தல் இம்மாதம் 22-24, 26 ஆம் திகதிகளில் இந்தியாவில் நடைபெறவுள்ளது.



ராஜீவ்

அத்தோடு இத்தேர்தல் குறுங்கால அவகாசத்தில் நடைபெற இருப்பதோடு, ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சி (களும்) யும் நேருக்குநேர் பொருதிக்கொள்ளும் தன்மையைக் கொண்டதாய் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தியா சுதந்திரம் பெற்ற காலத்திலிருந்து இடம்பெற்ற தேர்தல்களில் இத்தகைய தொரு நெருங்கிய போட்டியில் எந்தத் தேர்தலும் நிகழவில்லை என்பதால், இதன் பெறுபேறுபற்றிச் சொல்வது அனுபவம் உடைய அரசியல் வாதிகளுக்கும் சிரமமானதே.

இம்மாதம் 6ஆம் திகதியோடு வேட்புமனு வாபஸ் பெறப்படும் திகதியும் முடிந்த நிலையில், 7000 வேட்பாளர்கள் 527 ஆசனங்களுக்குரிய களத்தில் நிற்கிறார்கள். எல்லாத் தேர்தல்களையும் விட இதுவே மிகக் கூடுதலான வேட்பாளர்களைக் கொண்ட தேர்தலாக கருதப்பட்டாலும் இதில் போட்டியிடுபவர்களில் 6000 பேர் சுயேச்சை வேட்பாளர்களாவர்.

இத் தேர்தலில் ராஜீவ் காந்தியின் ஆளுங் கொங்கிரஸ் 509 இடங்களில் போட்டியிடுகிறது. ஏனைய 18 இடங்களை தனது ஆதரவாளர்களான ஜெயலலிதாவின் அ.தி.மு.க. வுக்கும் ஜம்மு காஷ்மீர் தேசிய மாநாட்டு ஆதரவாளர்களுக்கும் விட்டுக்கொடுத்துள்ளது.

எதிர்க்கட்சியினர், தமக்குக் கிடைத்த கால அவகாசம் குறுகியதாய் இருந்தாலும், எதிரியைத் தோற்கடிக்க வேண்டுமென்ற முனைப்பில், தமது கொள்கை வேறுபாடுகளை மென்று விழுங்கிக் கொண்டு ஒரு ஐக்கிய முன்னணியை அமைத்து, 526 ஆசனங்களுக்கு தமது அமைப்பிலிருந்து 655 வேட்பாளரைப் போட்டிக்கு நிறுத்தியுள்ளனர்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட மிகக் குறுகிய காலத்துக்குள் நடத்தப்டும் தேர்தல் இதுவேயாகும். இப்படி ராஜீவ் செய்ததன் நோக்கம் தனக்கெதிராக எதிர்க்கட்சியினர் ஐக்கியப்படும் வாய்ப்பை முறியடிக்கவே. ஆனால் நடந்ததோ அவர் எதிர்பார்த்ததற்கு மாறாக, எதிர்க்கட்சியினர் மிக வேகமாக தமது வித்தியாசங்களைப் புதைத்துக் கொண்டு ஒற்றுமைப்பட்டுள்ளனர். அதாவது இத்தேர்தலில்தான் வலதுசாரிகள், இடதுசாரிகள், மிதவாதிகள் (Centrist) ஆகிய சகலரும் ஐக்கியப்பட்டு, வேட்பாளர்களை நிறுத்தி ஒரு பொது எதிர்ப்பைக் காட்டியுள்ளனர்.

இதில் மிகப்பெரிய சாதனை என்னவெனில், எப்பொழுதும் முக்கியமான பிரச்சினைகள் தலைதூக்கும்போது தமக்கெதிராகவும் சிலவேளை ஆளுங் கொங்கிரசை ஆதரித்தும் நிற்கும் கொம்யூனிஸ்டுகளையும், தீவிர வலதுசாரிகளான பாரதீய ஜனதா கட்சியையும் எதிர்க்கட்சிகளின் தேசிய முன்னணி தம்பக்கம் வென்றெடுத்துள்ளது. கொம்யூனிஸ்ட்டுகளுடன் தேசிய முன்னணி புரிந்துணர்வுக்கு வந்துள்ளதால் இவர்களின் கேரள, மேற்கு வங்காள சகாக்களையும் தேசிய முன்னணி வென்றெடுத்துள்ளது.

வி. பி. சிங்கை தலைவராகக் கொண்ட ஜனதா தள் 240 ஆசனங்களை தனக்குரியதாக்கி எஞ்சிய 55 ஆசனங்களையும் ஏனைய மாநில அரசுகளையும் வேறு உப அமைப்புகளையும் பகிர்ந்து கொள்ளவிட்டுள்ளது.

### கடந்த தேர்தல் களங்கள்

முன்னைய தேர்தல்கள் ஓர் சீரான ஒழுங்கு முறையைக் கொண்ட போட்டி அமைப்பில் நிகழவில்லை. 1984இல் ராஜீவ் காந்தி போட்டியிட்ட தேர்தலில் ஆளும் கட்சிக்கு பெருமளவு வெற்றி கிட்டியது உண்மை. 541 ஆசனங்களில் 415 ஆசனங்களை ஆளும் கொங்கிரஸ் தட்டிக் கொண்டாலும், அதற்குக்கிடைத்த வாக்கு விகிதாசாரம் 48.1 ஆகும். இதுவே 1952க்குப் பின்னர் நிகழ்ந்த தேர்தல்களில் கிடைத்தவற்றுள் ஆகக் கூடுதலான தொகையாகும். ஆனால் 1984 ஆம் ஆண்டிலேயே எல்லா எதிர்க் கட்சிகளும் ஒற்றுமைப்பட்டு ஒவ்வொரு அபேட்சகர்களை ஆளும் கட்சிக்கு எதிராக நிறுத்தியிருந்தால், கொங்கிரஸை இந்திரா காந்தியின் மரணத்தால் ஏற்பட்ட அனுதாபத்தையும் ஒதுக்கிக் கொண்டு வெற்றி பெற்றிருக்கலாம்.

சிவா

1984 இல் நடந்த தேர்தலில் ஆளும் கொங்கிரஸ் அநேகமாக பழைய அங்கத்தவர்களைப்புறந்தள்ளி, புதியவர்களைப் போட்டிக்குநிறுத்தியது. ஆளுங் கட்சிக்கு ஒரு "புதிய தோற்றத்தை" அளிக்க வேண்டும் என அது அப்போது கருதியது. ஆனால் இம்முறை அப்படி எந்தவித மாற்றமும் நிகழவில்லை. பழையவர்களே மீளவும் போட்டிக்கு விடப்பட்டுள்ளனர். ஆனால் கே சி.பந்த்தின் விவகாரம் இதற்குள் ஒரு தில்லுமுல்லை ஏற்படுத்தியிருந்தாலும், அதை ஒருவிதத்தில் ராஜீவ் சமாளித்து கட்சிக்குப் பாதகம் ஏற்படாமல் பார்த்துக் கொண்டார் என்றே, சொல்லவேண்டும்.



வி. பி. சிங்

### களத்தில் வெற்றி யாருக்கு?

இவ்வாரம்தான் ஆளுங் கொங்கிரஸ் தனது தேர்தல் விஞ்ஞாபனத்தை வெளியிட்டுள்ளது அதில், கடந்த ஐந்து வருடமாக தாம் செய்து வந்த பொருளாதார அபிவிருத்தி வேலைகளைத் தொடருவது பற்றி, உறுதியளிக்கப்பட்டுள்ளது. அத்தோடு, தோற்கடிக்கப்பட்ட அவர்களின் பஞ்சாயத் ராஜ் மசோதாவும் எதிர்க்கட்சிகளுக்கு எதிராகப் பாவிக்கப்படவுள்ளது. அதாவது கிராம மக்கள் மட்டத்திலும் அதிகாரப்பரவலாக்கம் தாம் செய்யவுள்ளதாயும், அதற்கு எதிராக எதிர்க்கட்சி நிற்பதாகவும் சொல்லப்பட்டுள்ளது. அத்தோடு தேர்தலுக்கு மூன்று நாட்களுக்கு முன்னர் வரும் இந்திரா காந்தியின் பிறந்த தினத்தோடு (நொவ. 19) பெண்கள் உயர்வுக்கான சீர்திருத்தங்கள், நீதி சட்ட வாக்கச் சீர்திருத்தங்கள் பற்றியும் முன் வைக்கப்படும்.

எதிர்க்கட்சிகள் ராஜீவின் ஆளுங்கட்சிக்கு எதிராக போர்பஸ் ஊழல் பிரச்சினையையே பிரதானமாக முன் வைத்து வருகின்றன.

தேர்தலுக்கு முன்னர் பத்திரிகையாளருக்குப் பேட்டி கொடுத்த போது, ராஜீவ் மிக அமைதியாகவும் நம்பிக்கையோடுமே இருந்தார். தேர்தலில் நேருக்கு நேர் போட்டி பற்றி விசாரித்தபோது "அது பிரச்சினை அல்ல" என்று பதிலளித்தார். போர்பஸ் பிரச்சினை பற்றி பதில் அளிக்க மறுத்துவிட்டார்.

இருந்த போதும் கிடைத்து வரும் செய்திகளின்படி, இவரது தேர்தல் கூட்டங்களுக்கு பெரிய சனக் கூட்டமோ அல்லது கூட்டம்பற்றி அதிக அக்கறைப்படும் சனங்களோ இல்லையென்றே சொல்லவேண்டும். அதேவேளை எதிர்க்கட்சியினரின் கூட்டங்களுக்கு இதைவிட மக்கள் அக்கறை காட்டினாலும், அங்கும் பெரியளவிலான ஆவலை மக்கள் வெளிக்காட்டுகிறார்கள் என்று சொல்ல முடியாது.

நன்றி: சண்டே ரைம்ஸ் □

## உருளும் உலகில்

# இந்திய லோக்சபைத் தேர்தல் ஒரு கண்ணோட்டம்

வழக்கம் போலவே பரபரப்புடனும் விறுவிறுப்புடனும் இந்தியாவில் தேர்தல் பிரசாரங்கள் நடைபெறுகின்றன. அரசியல் கட்சிகள் தம் தேர்தல் அறிக்கைகளைப் பல்வகைப்பட்ட ஊடகங்கள் ஊடாகத் தொகுதிகளில் முடுக்கி விட்டிருக்கிறார்கள். உத்தரப் பிரதேசம், பீஹார், ராஜஸ்தான், ஒரிஸ்ஸா ஆகிய மாநிலங்களில் ஜனதா தள், பாரதீய ஜனதாக் கட்சி, இந்திரா கொங்கிரஸ் ஆகிய கட்சிகளின் அறிக்கைகள் பலத்த சலசலப்பைக் கிளப்பியுள்ளன. இதன் எதிரொலி மற்ற மாநிலங்களிலும் கேட்கிறது.

இந்திரா கொங்கிரசும் ஐந்து கட்சிகள் ஒருங்கிணைந்த தேசிய முன்னணியும் ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு மல்லுக்கட்டிக் கொண்டு நிற்கின்றன. இரு அணியினரும் எடுத்து வைக்கும் ஒவ்வோர் அடியையும் ஸ்ரீ லங்கா உட்பட சகல நாடுகளும் கூர்ந்து நோக்குகின்றன. தலைவலிக்குத் தலைப்பாகையை மாற்றிப் பார்ப்பது போல் அல்லாமல், இந்தியத் தேர்தல் முடிவுகள் இந்திய உப கண்டத்தில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும்.



மு. கருணாநிதி

பதினெட்டு வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை என்ற அடிப்படையில் இம்முறை தேர்தல் நடைபெறுகிறது. மேற்கு வங்காளத்தில் மார்க்ஸிஸ்ட் கட்சியின் ஆதிக்கத்திலுள்ள ஜனநாயக வாலிபர் சங்கம்தான் பத்து ஆண்டுகளுக்கு முன்னர், 18 வயது வந்த அனைவருக்கும் வாக்குரிமை என்ற கோஷத்தை முன் வைத்தது. இளைஞர் கையில் வோட்டுரிமை கொடுத்து விளையாடுவது 'ஆபத்தான விளையாட்டு' என்று சிலர் கருதுகிறார்கள். இது ஆளும் கட்சிக்குத்தான் ஆபத்தாக முடியும் என்பது இவர்கள் அபிப்பிராயம். புயல் உண்டாகும் இடம் என்று கடலை வெறுப்பதா?

ஈ. ஆர். திருச்செல்வம்

இந்தியா சுதந்திரமடைந்தது முதல் தேர்தல் வரிசையில் இப்போது நடைபெறவுள்ளது 9-ஆவது நாடாளுமன்ற (லோக் சபை) த் தேர்தலாகும். இத் தேர்தலானது மூன்று கட்டங்களில் நொவம்பர் 22, 24, 26 ஆம் திகதிகளில் நடைபெறவுள்ளது. தேர்தலில் மொத்தம் 7000 வேட்பாளர், கட்சிகளின் எதிர்கால அரசியல் பாதையைத் தீர்மானிக்கும் 498 மில்லியன் வாக்காளர் பெருமக்களின் தீர்ப்பை எதிர் பார்த்துள்ளனர்.

ஐந்து கட்சிகளின் கூட்டமைப்பான தேசிய முன்னணியில் ஜனதா தள், தெலுங்கு தேசக் கட்சி, தி.மு.க, அஸ்ஸாம் மாநிலக் கட்சியான அஸ்ஸாம் கண பரிஷத், கொங்கிரஸ் (எஸ்) ஆகிய கட்சிகள்

(13ஆம் பக்கம் பார்க்க)



என். ரி. ராமராவ்

# வேலணை ப. நோ. கூ. சங்கம்

## புதிய பணிமனைத் திறப்புவிழா மலர்

## வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் செயற்பாடுகள் பற்றி...

(1) தொழிற்பரப்பு :

மண்டைதீவுக் கிராம சபை, அல்லைப்பிட்டி வேலணைக் கிராமசபை (வேலணை - சரவணை புளியங்கூடல் — அல்லைப்பிட்டி — மண்கும்பான் மண்டைதீவு ஆகியன அடங்கும்)

(2) அங்கத்தவர் தொகை : 5957

(3) பங்குமுதல் : 193728/-

(4) சங்கத்தின் நுகர்ச்சியாளர் தொகை : 26500

(5) சங்கத்தின் தொழிற்பாடுகளும், சேவைகளும் :

1. நுகர்ச்சிப் பொருள் விற்பனை.
2. புடவை விற்பனை.
3. எரிபொருள்விற்பனை.
4. கிராமிய வங்கிச் சேவை.
5. மோட்டார் வாகனச் சேவை.
6. கதிரை வாடகைக்கு விடும் சேவை.
7. பாடசாலைக்கு உணவு வழங்கல்.
8. விவசாயப் பொருட்கள், பசளை, சீமெந்து வகைகள்.

(6) மேற் கூறப்பட்ட தொழிற்பாடுகளை சங்கத்தின் பின்வரும் விற்பனை நிலையங்கள் ஊடாகச் செயற்படுத்தி வருகின்றது :



**வே. செல்லத்துரை**
பொது முகாமையாளர்

| | | |
|---|---|---|
| 1. | மொத்த விற்பனை நிலையம் | 1 |
| 2. | நுகர்ச்சிக் கிளைகள் | 16 |
| 3. | புடவை விற்பனை நிலையம் | 1 |
| 4. | எரிபொருள் நிரப்பு நிலையம் | 1 |
| 5. | கிராமிய வங்கி | 1 |
| 6. | மக்கள் கடைகள் | 3 |
| 7. | வாகனங்கள் | 3 |
| 8. | கதிரை வாடகைக்கு விடுதல் | 200 |
| 9. | உத்தரவு பெற்ற வியாபாரிகள் | 5 |

(12 ஆம் பக்கம் பார்க்க)



வேலணை ப. நோ. கூ. சங்கத்தால் நிர்மாணிக்கப்பட்ட புதிய மேல்மாடிப் பணிமனை

### கூட்டுறவுக் கீதம்

எங்கள் கைகள் ஒன்ருய் எழுக
இன்புறும் உலகம் இங்கெழவே

புதிதாய் எழும் ஓர் உலகம்
கூட்டுறவால் இங்கே நிமிர்க
பிளவுற்றெங்கும் சிதறும் மனிதர்
பிரிவற்றவராய் கையே பிணைக

இணையும் கைகள் கறைபடியாமல்
இயற்றிடப் பணிகள் பலவுள
வறுமையை நீக்கும் தொழில்களை ஆக்கி
வளம் பெறச் செய்யும் கலைஉள

கைத்தொழில், வாணிபம் பல்தொழில்நுட்பம்
கலைகளும் கல்வியும் பேணி
நலிவுற்றவர்க்குதவும் நலன்களும் நாடி
நாட்டை நிமிர்த்துதல் கூட்டுறவு

கூட்டுறவென்பதோர் பண்பாடு அதைக்
கூறுபடுத்துதல் பொதுக் கேடு
கூடிவளர்தல் கொள்கையில் உயர்வொரு
கூரையின் கீழ் வளர் அன்புறவு

பொதுமை நலத்தது கூட்டுறவு
புரிந்துணர்வின் மையம் கூட்டுறவு
சிறுமைகள் அற்றது கூட்டுறவு
சிதையா உலகாகுக்க கூட்டுறவு.

## கூட்டுறவு — மனிதகுல மேம்பாட்டிற்கான திறவுகோல்

பண்டைக்கால மக்கள் தம் குழு வாழ்க்கை முறையில் கூட்டுணர்வையும், கூட்டுறவுச் செயல்பாடுகளையும் கொண்டிருந்தார்கள். ஆனுல் முதலாளித்துவ கைத்தொழில் பொருளாதார அரசியல் மாற்றங்களுக்குப் பின்னுல் கூட்டு வாழ்க்கை முறை சிதைவடையத் தொடங்கியது. இந்தச் சிதைவு ஏழைத் தொழிலாளர் வாழ்வைச் சூறையாடியது. பணப்பொருளாதாரம் மேலோங்க பணமற்ற ஏழைகள் நலிவடையத் தொடங்கினர். முதலாளித்துவ ஜனநாயக அமைப்பு முறையின் கீழேயே இதற்கான மாற்றீடு தேவைப் பட்டது.

சமுதாயத்தின் நலிவடைந்த பிரிவினரின் துயர நிலை பற்றிப் பலரும் சிந்திக்கத் தொடங்கினுர்கள். அவ்வகையில் 19ஆம் நூற்ருண்டில் தோன்றிய சிந்தனையாளராகிய கார்ல்மாக்ஸ் முதலாளித்துவத்துக்கு எதிராகக் குரல் எழுப்பியதோடு சமதர்ம அமைப்புப் பற்றிய சிந்தனையையும் வெளியிட்டார். இவர் உற்பத்திக் காரணிகள் அனைவருக்கும் சொந்தமென்றும் இதில் மூலதனத்துக்கு முக்கியத்துவம் கொடுக்காது உழைப்புச் சக்திக்கே முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்றும் வற்புறுத்தினுர். இவரால் கற்பனுவாத சோஷலிஸ்டுகள் என்ற வரிசையில் வைக்கப்பட்ட றெபேட் ஓவன் என்பவர் தாம் ஒரு கைத்தொழில் அதிபராக இருந்தும் தொழிலாளருக்கான கொம்யூன் முறையை முதலில்

**செ. சண்முகவடிவு**
நெறியாளர்

(13ஆம் பக்கம் பார்க்க)


குமாரசாமி றெக்ஸ்றைஸ்ஸ்
42, 44, பெரியகடை, யாழ்ப்பாணம்.

கு. சிவப்பிரகாசம் அன் சன்ஸ்
1/8, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

அழகர் அரிசி ஆலை
வட்டுக்கோட்டை.

நியூ ஆனந்தா ஜுவலர்ஸ்
185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நியூ லக்கி ஸ்டார் ஜுவல்லறி
229 A, கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம்.

தீபா ஜுவல்லறி
177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

ஜெயச்சித்திரா ஜுவல்லறி
177/5, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

சரிதா ஜுவலர்ஸ்
241, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

யாழினி ஜுவல்ஸ்
244, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

மக்கள் பணி சிறக்க வாழ்த்துகிருேம்
தெல்லிப்பழை ப.நோ.கூ. சங்கம் தெல்லிப்பழை.
நல்லூர் ப.நோ.கூ. சங்கம் நல்லூர்.

வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் பணி சிறக்க வாழ்த்துகிருேம்
வலி.கிழ.தெ. பகுதி ப.நோ.கூ, சங்கம் நீர்வேலி.
சாவகச்சேரி ப.நோ.கூ. சங்கம் சாவகச்சேரி.

சோ. மார்க்கண்டு
ஐங்கரன் பப்படம்
வேலணை கிழக்கு,
வேலணை.

அ. சி. குமாரலிங்கம்
உ. பெ. வியாபாரி
மண்டைதீவு.

வை. வடிவேலு
உ. பெ. வியாபாரி
புளியங்கூடல் சந்தி,
வேலணை.

இரட்ணம் ஸ்ரோர்ஸ்
(சோமசுந்தரம்
உ. பெ. வியாபாரி)
துறையூர், வேலணை.

ஈசன் ட்ரேடர்ஸ்
வங்களாவடி,
வேலணை.

குணரெட்ணம் ஸ்ரோர்ஸ்
96, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

ரி. ஆர். வி. ஏஜென்சி
65, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

லலிதா ஜுவல்லறி
213, 133, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

சிமாட்டி நகை மாளிகை
220 A, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

பெற்ரா ஏஜென்சி
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

# வேலணை ப. நோ. கூ.

## புதிய பணிமனை [மேல்

18 – 11 – 1989 சனிக்கி




### நிறுவனத்தின் நிமிர்வு வாழ்க

1986ஆம் ஆண்டுக்குப் பின்பு வேலணை ப. நோ. கூ. சங்கத்தின் வளர்ச்சிப் போக்கானது ஒரு ஆரோக்கியமான கூட்டுறவு வளர்ச்சிக்கு ஏற்ப அமைந்துள்ளது. இதற்கு உதாரணமாக தற்போது இவர்களால் நிர்மாணிக்கப் பட்டுள்ள மாடிக் கட்டிடம் சான்று பகர்கிறது அத்துடன் சமுதாய நோக்கில் நெருக்கடியான ஒரு சாதகமற்ற அரசியல் சூழ்நிலையில் யாழ்ப்பாணத்திலிருந்து தீவுப்பகுதியை நோக்கி, நகர்ந்த மக்களுக்கு சிரமத்தின் மத்தியில் வேண்டிய உணவு வசதிகளுக்கான பொருட்களை வழங்குவதில் முன்னின்று உழைத்தமையையும் கருத்தில் கொள்ளல் வேண்டும். சமயத்தில் அல்லலுற்ற அகதிகளுக்கு இலவசமாகவும் நிவாரணங்களை அளித்ததிலும் தனது பங்களிப்பை நிறைவாக நல்கியமையையும் குறிப்பிட வேண்டும்.

இவ்வாறு பல பணிகளின் இடையிலும் தனது நிறுவன வளர்ச்சியையும் பாதுகாத்து நிமிர்ந்து நிற்கும் வேலணை ப. நோ. கூ. சங்கத்தை அதன் மாடித் திறப்புவிழா வைபவத்தின்போது வாழ்த்துவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ச. வேலாயுதபிள்ளை
கூ. அபிவிருத்தி ஆணையாளர்.
(வ. கி.)



### நல்ல பணிபுரிய நீடு வாழ்க

வேலணை ப. நோ. கூ. சங்கத்திற்கென இதுவரை காலமும் சகல வசதிகளும் கொண்ட ஒரு தலைமைக் காரியாலயம் இல்லாதிருந்த குறை இன்றுடன் நிறைவெய்துவதையிட்டு யாழ். மாவட்ட கூ. அ. உ. ஆணையாளர் என்ற வகையில் பெருமகிழ்வடைகிறேன். இவ்வாறான ஒரு கட்டிடம் வங்கிக் கடனை எதிர்பாராது வெற்றுச்சாக்குகளை விற்று வந்த பணத்தினையே பிரதான மூலதனமாகக் கொண்டு கட்டி முடிக்கப்பட்டதன் மூலம் ஏனைய ப. நோ. கூ. சங்கங்களுக்கு ஒரு முன்மாதிரியினையும் காட்டி நிற்பதை வெகுவாகப் பாராட்டுகிறேன் இக்கட்டிடத்திற்கான தீர்மானம் போட்டது முதற்கொண்டு பூர்த்தி வரை எத்தனையோ கூட்டுறவாளர்களின் நெஞ்சார்ந்த பங்களிப்பு நிகழ்ந்திருக்கும். அவர்களின் அரிய பங்களிப்பையும் பாராட்டி வாழ்த்துவதோடு மேன்மேலும் வேலணை. ப. நோ. கூ சங்கம் நல்ல பணியாற்றும் நிறுவனமாய் நிமிர்க எனவும் வாழ்த்துகிறேன். எக்கணமும் மக்கள் துயர் களைந்து உயர்ந்த வாழ்க்கைத் தரமெய்தி சமத்துவம் பெற்றுய்யும் உயர்ந்த குறிக்கோளை நோக்காகக் கொண்டு வளர இறைவன் அருள்புரிக என வேண்டுகிறேன்.

எஸ். ஐ. நித்தியராஜ்
யா/கூ. அ. உ. ஆணையாளர்
யாழ்ப்பாணம்.

## சங்கக் கட்டிடத்தின் வளர்ச்சி



23.07.1977 இல் வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமாகப் பதியப்பட்டது. இதை அடுத்து கூட்டுறவு ஆணையாளரால் நியமனம் செய்யப்பட்ட மூவர் கொண்ட நெறியாளர் சபையினால் நெறிப்படுத்தப் பட்டது. இதன் அங்கத்தவர்களாக திரு. எம். சுப்பிரமணியம் அன்றைய வேலணை உதவி அரசாங்க அதிபர், அன்றைய கூட்டுறவுப் பரிசோதகர் திரு. செ. லிங்கநாதன், கூட்டுறவு தலைமைக் காரியாலயப் பரிசோதகர் திரு. கே. எஸ். அழகரத்தினம் ஆகியோர் இருந்தனர். இவர்களது காலத்தில் இச் சங்கத்திற்கு எட்டுப்பரப்புக் காணி ரூபா 32,000/- செலவில் சங்கத்தால் கொள்வனவு செய்யப்பட்டது. இப்பணம் முழுவதும் வெற்றுச் சாக்கு விற்பனையில் இருந்து பெறப்பட்டதாகும். அசையாச் சொத்துக்கள் என்ற வகையில் முதல் முதல் வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்திற்கு கிடைத்த முதல் சொத்து இதுவாகும். இதனால் இக் காலத்தில் இருந்த நெறியாளர் சபை சிறப்புப் பெற்றது. இதைத் தொடர்ந்து 30. 12. 77 இல் சங்க நிர்வாகம் மக்களால் தெரிவு செய்யப் பெற்ற நெறியாளர்களிடம் கையளிக்கப் பெற்று இதன் தலைவராக கூட்டுறவாளரும் சமாதான நீதவானுமான திரு. சி. இராசரெத்தினம் அவர்கள் தலைமையில் சங்கம் வழிநடாத்தப்பட்டது. இக் காலத்தில் மேற்படி 8 பரப்புக் காணியுடன் மேலும் 12 பரப்புக் காணி ரூபா 48,000/- ரூபாவுக்கு வாங்கப்பட்டு மொத்தம் 20 பரப்புக்காணி சங்கத்திற்குச் சொந்தமாக்கப்பட்டது. தொடர்ந்து திரு. சி. இராசரெத்தினம் அவர்கள் காலத்திலேயே இக் காணியில் சங்கத்தின் கட்டிடத்திற்கான அத்திவாரக் கல் 29.01.79 இல் ஊர்காவற்றுறைத்தொகுதியின் பாராளுமன்ற உறுப்பினரான பண்டிதர் திரு. கா. பொ. இரத்தினம் அவர்களால் நாட்டப்பெற்று கட்டிட வேலைகள் தொடர்ந்து திரு. சி. இராசரெத்தினம் அவர்களது தலைமைத்துவகால நெறியாளர்களில் நானும் ஒருவனாகச் சேவையாற்றி வந்துள்ளேன். இதைத் தொடர்ந்து 21.02.82ஆம் திகதியிலிருந்து திரு. நா. பாலச்சந்திரன் அவர்களது தலைமையில் செயல்பட்ட நெறியாளர் சபையினால் கீழ்க்கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டு, கூ. ஆ. உ. ஆணையாளர் திரு. ஜெயகாந்தன் அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. கீழ்க்கட்டிடத்திற்கு ஏற்பட்ட நிர்மாணச் செலவு ரூபா 700,000/- ஆகும்.

04.06.86இல் திரு. வி. சிவராசா அவர்கள் தலைமையிலான நியமனம் செய்யப்பெற்ற நெறியாளர்கள் சங்கத்தின் பொறுப்பை ஏற்றனர். இதன் மற்றைய அங்கத்தவர்கள் திரு. பொ. நடராசா, திரு. கி. பீற்றரும் ஆவோம். எமது காலத்தில் வெற்றுச் சாக்கு விற்பனையால் வந்த பணத்தினைத் தனியான சேமிப்புக் கணக்கு ஒன்றில் போட்டு கிடைத்த வருமானத்தில் மேல்மாடிக் கட்டிடம் கட்டுவதற்கான ஆரம்ப ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டதுடன் 15.09.89இல் இதற்கான அத்திவாரக்கல் திரு. எம். கே. முருகையா — அப்போதைய தலைமைக் காரியாலயப் பரிசோதகரால் இடப் பெற்றது.

11.06.89 எமது சங்கத்தின் நெறியாளர் குழுத் தேர்தலையடுத்து நான் இச் சங்கத்தின் தலைமைப் பதவியை ஏற்றுச் செயல்பட்டு வருகின்றேன். எமது காலத்தில் வெற்றுச் சாக்குகளால் வந்த வருமானங்களையும், பொருளோட்ட அற வீடுகளால் வந்த வருமானங்களையும் மாதா மாதம் கிடைத்த லாபத்தின் ஒரு பகுதியையும் கொண்டு ரூபா 950,000/- பெறுமதியான மேல்மாடிக் கட்டிடத்தைக் கட்டிமுடித்துள்ளோம். இதற்காக எதுவித வங்கிக்கடனும் பெற்றுக் கொள்ளவில்லை. என்பது குறிப்பிடத்தக்கது.

இச் சங்கக் கட்டிடம் உயர்ந்தது போல சகல துறைகளிலும் உயர்ந்து சமூகமுன்னேற்றத்திற்கு வாய்ப்பளித்து மக்களிடமிருந்து பிரிக்கப்பட முடியாத வலுவான பொருளாதார கட்டமைப்பாக இதனை வளர்ப்பதற்கு எம்மாலானவற்றைச் செய்வோம் என்ற நம்பிக்கைத் துளிர் எம்மிடம் உண்டு. வடபகுதியில் உள்ள வளர்ந்த சங்கங்களைப் போல எமது சங்கத்

(13ஆம் பக்கம் பார்க்க)

வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்

சுன்னாகம் ப. நோ. கூ. சங்கம்
சுன்னாகம்.

நெடுந்தீவு ப. நோ. கூ. சங்கம்
நெடுந்தீவு.

# சங்கம் (வரையறுக்கப்பட்டது — பதிவு இல. J/649)

# மாடி] திறப்புவிழா மலர்

## கிழமை பி. ப. 2.00 மணி

### பெரும் புதையல் என வாழ்க



வேலணைப் ப. நோ. கூ. சங்கத்தின் ஒவ்வொரு வளர்ச்சியிலும் என்னையும் பிணைத்துக் கொண்டவன் என்றவகையிலும் அதனை நெறிப்படுத்தும் தலைமைப் பொறுப்பிலும் இருந்தவன் என்பதாலும் இன்றைய சங்கத்தின் மாடிக்கட்டடத் திறப்பு விழாவையிட்டு மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். வேலணைப் பதியின் மத்திய ஸ்தானத்தில் பல்வேறு அரச காரியாலயங்களின் இருப்பிடங்களை அண்மியும் சங்கப் பணிமனை மாடியுடன் நிமிர்ந்து நிற்பது வெறும் பெருமை என்பதற்கும் மேலாக சங்கப் பாவனையாளர், பொதுமக்கள், எதிர்காலச் சந்ததியினர்க்கும் ஈட்டிவைத்த பெரும் புதையல் என்றே கருத வேண்டும்.

வேலணை ப. நோ. கூ. சங்க ஆரம்பகாலத்தில் இருந்து அதன் வளர்ச்சியின் பங்காளிகளாக இருந்துவரும் ஒவ்வொருவர்க்கும், இன்றைய கட்டிட நிமிர்வுக்கு உறுதுணையான தூண்களாய் விளங்கிய இன்றைய, கடந்த கால இயக்குநர் சபை தலைமை, பொது முகாமையாளர் அனைவர்க்கும் எனது வாழ்த்துக்களைத் தெரிவிப்பதோடு சங்கம் மேன்மேலும் வளர எனது நல்லாசிகளையும் தருவதிலும் பெருமகிழ்வு எய்துகிறேன்.

சி. இராசரெத்தினம் J. P
முன்னாள் தலைவர்.
வேலணை ப. நோ. கூ. சங்கம்

### சாதனையின் பங்காளியாவதில் மகிழ்வெய்துகிறோம்



உலகில் காணும் எல்லா ஆக்க வேலைகளும் மனிதனின் ஊக்கத்தில் இருந்துதான் பிறந்திருக்கின்றன என்கிறார் விவேகானந்தர் ஊக்கமிக்க எமது கூட்டுறவுச் சங்க ஊழியர்களின் உழைப்பின் நிமிர்வில் இருந்து பிறந்ததே இந்த உயர்ந்த கட்டிடமும். உழைக்கும் வர்க்கத்தின் வியர்வைத்துளிகளில் இருந்துதான் உலகின் உயர்ந்த சாதனைகள் என்றால் அந்தச் சாதனைகளின் பங்காளிகளாக நாமும் நிற்கிறோம் என்பதை நினைக்கையில் உள்ளம் உவகை உறுகின்றது.

இதுபோல் இன்னும் பல ஆக்க பூர்வமான செயல்பாடுகளை செய்யத் துணிந்து செயல்படுவதும் அவை மக்களை உரிய வகைப் பயன்பாடாகச் சென்றடைவதும் எம்முன் உள்ள பணிகளாகும். அதற்கு நெறியாளரும், முகாமையாளரும், ஊழியர்களும், நுகர்வாளரும் ஒன்று கூடி முயல்வோமாக. அதற்கு முன்னின்றுழைக்க எனது ஆசிகள்.

வேலணை கூ. ஊழியர் சங்கம்
சார்பாக,
தலைவர் ; க. சிங்காரவேல்

### ஆசிச் செய்தி



1975, 1976 ஆண்டுக் காலப்பகுதியில் தீவுப்பகுதியில் இயங்கி வந்த மூன்று பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் நிதி நிர்வாகக் குறைபாடுகள் சம்பந்தமாக மக்களுக்கு ஆற்ற வேண்டிய சேவைகளை திருப்திகரமாக நடாத்த முடியாத ஒரு நிலை உருவாகியிருந்தது. அக் காலகட்டத்தில் இயங்கி வந்த கூட்டுறவு அதிகார சபை இம்மூன்று சங்கங்களையும் ஒன்றிணைத்து தீவுப் பகுதி முழுவதற்குமாக தீவுப் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் என்ற பெயரில் ஒரு புதிய சங்கம் இயங்குவதற்கான வழிவகைகளை மேற்கொண்டது. இப்புதிய சங்கத்தின் இயக்குனர் சபையை இவ் அதிகார சபையே நியமனம் செய்தும் இருந்தது.

இப்புதிய சங்கம் சுமார் பத்து மாதங்கள் செயலாற்றி பல பிரச்சினைகளால் மீண்டும் தீவுப்பகுதியில் முன்பு இருந்தது போன்று மூன்று புதிய சங்கங்கள் 1977ஆம் ஆண்டு பதிவு செய்ய வேண்டிய சூழ்நிலை எழுந்தது.

1977ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட வேலணை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நியமனம் செய்யப்பட்ட இயக்குனர் சபை உறுப்பினர்களாக அச்சமயம் வேலணையில் கடமை பார்த்த உதவி அரசாங்க அதிபர் திரு. ச. சுப்பிரமணியம், கூட்டுறவுத் திணைக்கள காரியாலயப் பரிசோதகர் திரு. மு. அழகரெத்தினம், நானும் இருந்து வந்தோம். இவ் இயக்குனர் சபை சங்கத்தின் வெற்றுப் பொருட்கள் விற்பனை செய்து கிடைக்கப் பெறும் வருமானத்தைக் கொண்டு இச் சங்கத்திற்கு ஒரு நிரந்தர கட்டிடம் அமைப்பதற்கு ஒரு காணியை கொள்வனவு செய்தல் வேண்டும் எனத் தீர்மானித்து தற்போது சங்கம் அமைந்துள்ள 8 பரப்புக் காணியை ஒரு ஆரம்ப நடவடிக்கையாக ரூபா 32,000/-க்கு கொள்வனவு செய்தது. தொடர்ந்து வந்த இயக்குனர் சபையினர் எடுத்த நன்முயற்சியின் பயனாக இன்று

(13ஆம் பக்கம் பார்க்க)

### ஆசிச் செய்தி



வேலணைக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைமை அலுவலக இருமாடிக் கட்டிடத் திறப்பு விழவுக்கு வாழ்த்துச் செய்தி எனக்கு அனுப்பக் கிடைத்தமையை ஒரு பேறாகவே கொள்கிறேன். சங்கத்தின் சாக்கு விற்பனையால் தேறிய பணத்தை பிரதானமாகக் கொண்டு இத்தகைய ஒரு பெரும் கட்டிடத்தைக் கட்டியெழுப்பிய இயக்குனர் சபையையும் இக் கூட்டுறவுச் சங்கத்தின் ஊழியரையும் பாராட்டாமல் இருக்க முடியாது. இக்கட்டிடத்தில் அமைந்துள்ள மேல் மாடிக்கட்டிடத்தின் சில பகுதிகளை வேறு பிற ஸ்தாபன - அலுவலக வேலைகளுக்கு வாடகைக்குக் கொடுப்பதன் மூலம் சங்கம் மேலும் லாபம் ஈட்ட வாய்ப்புண்டு.

வேலணை கூட்டுறவுச் சங்கம் மேலும் பல சேவைகளை ஆற்றி உயரவேண்டும் என வாழ்த்துகிறேன்.

எம். எஸ். சிவநாதன்
A. C. C. D. (Dev.)
யாழ்ப்பாணம்

### ஆசிச் செய்தி

வேலணை ப. நோ. கூ. சங்கம் தனது ஸ்தாபனத்தைப் புதுமெருகூட்டி மேல் மாடிக் கட்டிடத்தைத் திறந்து வைத்துப் பெரு விழாக் காணும் இவ்வேளையில் அந்நிறுவனம் தொடர்ந்தும் சிறப்புற வளர வாழ்த்துவதில் பெருமையடைகிறேன்.

சங்கத்தின் பொதுப்பணிகள் பலவாறாக இருந்த போதிலும் கல்வி வளர்ச்சிக்கும் சிறப்பாக ஆற்றும்பணி அளவிடற்கரியது. இப்பணி மேலும் சிறக்க சங்கம் அயராது உழைக்க முன்வரவேண்டும். பின்தங்கிய பகுதிகளுக்கு தனது பணிகள் யாவற்றையும் விஸ்தரிக்கவும் வேண்டி வாழ்த்துகிறேன்.

சி. புலேந்திரன்
உதவிக் கல்விப் பணிப்பாளர்
வேலணைக் கல்விக்கோட்டம்,
வேலணை.


**கண்ணன் பேக்கரி**
பழைய பஸ் கொம்பனி,
வேலணை.

**நியூ சென்றல் பாமர்சி**
பழைய பஸ் நிலையம்,
வேலணை.

**யூட் போட்டோ**
வங்களாவடி,
வேலணை.

**து. முகலாயன்**
வேலணை கிழக்கு,
வேலணை.

**கபிலன் ரெக்ஸ்ரைல்ஸ்**
வங்களாவடி,
வேலணை.

**நிரு கிறைண்டிங் மில்**
புளியங்கூடல் சந்தி,
ஊர்காவற்றுறை.

**விசயன் பேக்கரி**
வங்களாவடி,
வேலணை.

**ருகுரைஸ் ட்ரேடிங்**
284, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**என். ஆர். என். சிவா பொடிபில்டேர்ஸ்**
வேலணை.

**சண்முகா ரேட் சென்ரர்**
167, கே. கே. எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.


**ங்கம் நீடு நிலைத்து வாழ வாழ்த்துகிறோம்!**


**ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்**
ஊர்காவற்றுறை.

**புங்குடுதீவு - நயினாதீவு ப. நோ. கூ. சங்கம்**
புங்குடுதீவு

# வேலணை ப. நோ. கூ. சங்கம்

## புதிய பணிமனைத் திறப்புவிழா மலர்


**அம்பாள் ட்ரேடர்ஸ்**
வங்களாவடி,
வேலணை.

**மாரிமுத்து என்ஜினியறிங்**
என்ரபிறைஸ்
வங்களாவடி,
வேலணை,

**நிக்கி இன்டஸ்ரீஸ்**
நல்லூர், யாழ்ப்பாணம்.
( நிக்காடோ )
வங்களாவடி, யாழ்ப்பாணம்.

**உதயம் ட்ரேட்ஸ்**
232, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.


**மயூதரன் அன் கோ.**
41, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**யோகு ரேடிங் கொம்பனி**
332, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

**சிற்றி ஏஜென்சி**
இல. 158, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

**பொ. தங்கராசா**
45, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

**ஜெமிலா ட்றேப்பறி மாட்**
24, 26, பெரியகடை,
யாழ்ப்பாணம்.

வேலணை ப. நோ. கூ. சங்க
நெறியாளர் குழுவும் பொதுமுகாமையாளரும்

### மழை பொழியும் மேகமாய் விளங்குக

''மேகங்கள் மழைபொழிவதற்காகக் கூடுகின்றன. காகங்களோ கிடைத்ததை உண்பதற்காகக் கூடுகின்றன. மேகங்களையொத்தவர்களாய் கூட்டுறவாளர்கள் ஒன்றுகூடி சமுதாயத்தை வளம்படுத்தப் பாடுபட வேண்டும்'' என்கிறார் தமிழக முதல்வர் கலைஞர் மு. கருணாநிதி. அதற்கேற்ப வேலணை ப.நோ.கூ. சங்கம் தனது மக்களை வளம்படுத்தும் மேகங்களாய் விளங்குக என்று நெடுந்தீவு மக்களினதும், ப.நோ.கூ. சங்கத்தினதும் சார்பாக வாழ்த்துகிறேன்.

அ.த. அம்பலம். ஜே பி.
தலைவர் — நெடுந்தீவு
ப. நோ. கூ. சங்கம்.

### வாழ்த்து !

வேலணை ப.நோ.கூ.சங்கக் கட்டிடம் பூர்த்தி செய்யப்பட்டு அழகுற மிளிரக் காரணமாக இருந்த கூட்டுறவாளரின் அயராத முயற்சியையும், ஆதரவையும் பாராட்டுகிறேன். இன்றைய சூழ்நிலையில் இத்தகு பணிகள் கடினமானவை. எனினும் கூட்டுறவில் கொண்டுள்ள நம்பிக்கையும் ஆற்றல் வாய்ந்த உழைப்புமே மேற்படி பணிகளின் நிறைவேற்றத்திற்குக் காரணமாய் அமையும்.

சங்கங்கள் தம்மைப் பலப்படுத்தும் இத்தகைய சிறப்பான பணிகளோடு மக்களது முன்னேற்றத்திற்கு உதவும் கலை, கல்வி, கைத்தொழில் முதலியவற்றில் அவர்களுக்குள்ள பிரச்சினைகளை இனங்கண்டு தீர்வு காண்பதன்மூலம் கூட்டுறவின் மகத்துவத்தை மக்களுக்கு உணர்த்தலாம். மேற்படி பணிகளில் பீடுநடை போட கூட்டுறவாளர் சார்பிலும் யாழ்ப்பாண மாவட்ட கூட்டுறவு சபையின் சார்பிலும் வாழ்த்துகிறேன்.

சி. சிவமகாராசா
தலைவர்
யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை.

### வேலணை....

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

(7) சங்கத்தின் வியாபார வளர்ச்சிப் போக்கு அட்டவணை :-

| | 83/84 | 84/85 | 85/86 | 86/87 | 87/88 | 88/89 |
|---|---|---|---|---|---|---|
| கொள்வனவு | 8283167/- | 14435042/- | 12181552/- | 16814489/- | 16899492/- | 21829826/- |
| விற்பனவு | 9660772/- | 15792186/- | 13139041/- | 17728752/- | 18797448/- | 24306247/- |
| மொத்தலாபம் | 325059/- | 584323/- | 436133/- | 8[illegible]7795/- | 1124438/- | 1117919/- |
| சுத்தலாபம் | 449457/- | 359145/- | 41635/- | 479191/- | 6[illegible]9931/- | 487590/- |
| விற்பனையில் மொத்தலாப வீதம் | 3.38% | 3.70% | 3.31% | 4.72% | 5.98% | 4.59% |
| விற்பனையில் சுத்த லாப வீதம் | 4.65% | 2.27% | .31% | 2.70% | 3.35% | 2% |

(8) அரசாங்கத்தால் வழங்கப்படும் உணவு முத்திரைக்கான மாதாந்த விற்பனை :- 783600/-

(9) சங்கத்தின் தொழிலாளர்கள் எண்ணிக்கை :- 60

(10) சங்கத்தின் தொழிலாளர்களின் சம்பள விபரம் :-

| | 83/83 | 84/85 | 85/86 | 86/87 | 87/88 | 88/89 |
|---|---|---|---|---|---|---|
| வருடாந்த மொத்த சம்பளம் | 449305/- | 488980/- | 459846/- | 657047/- | 830142/- | 875291/- |
| வருடாந்த ஊ. சே. லா. நிதி | 44351/- | 48052/- | 43352/- | 53170/- | 80124/- | 91955/- |
| வருடாந்த ஊ. நம்பிக்கை நிதி | 13938/- | 17344/- | 16387/- | 14785/- | 20104/- | 21375/- |

மேலே காட்டப்பட்ட அட்டவணைகளின்படி 83/84ஆம் ஆண்டுகளுடன் 88/89ஆம் ஆண்டுகளின் ஊழியர் சம்பளம், ஊழியர் சேமநிதி, ஊழியர் நம்பிக்கை நிதியத்தை ஒப்பிடும் போது இரண்டு மடங்கு சம்பள அதிகரிப்பு சங்கத்தால் வழங்கப்பட்டுள்ளது. கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப் பெற்ற சம்பளம், அலவன்ஸ் உட்பட வாழ்க்கைச் செலவுப் புள்ளி அலவன்ஸ் ரூபடு 260/- ம் ஊழியர்கட்கு வழங்கப்பட்டு வருகின்றது.

(11) வெற்றுச் சாக்கு விற்பனை விபரம்:-

| ஆண்டு | தொகை ரூபா |
|---|---|
| 1985 | 89911/- |
| 1986 | 16635/- |
| 1987 | 174886/- |
| 1988 | 155494/- |
| 1989 | 137000/- |

(12) சங்கக் கட்டிடம் :-

சங்கத்திற்கான காணி 20 பரப்பு 77/88ஆம் ஆண்டுகளில் ரூபா 80,000/-க்கு சங்கத்தின் வெற்றுச் சாக்கு விற்பனைப் பணத்தில் கொள்வனவு செய்யப்பட்டது. சங்கக் கீழ்க்கட்டிடம் ரூபா 735,000/- செலவில் கட்டப்பெற்றது. இதற்கு ரூபா ஏழு இலட்சம் வங்கிக் கடனாகப் பெறப்பட்டு முழுத்தொகையும் வங்கிக்குச் செலுத்தப்பட்டு விட்டது. மாடிக் கட்டிடம் 9½ இலட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப் பெற்றது. இதற்குரிய பணம் ரூபா 5,75,000/- வெற்றுச்சாக்கு விற்பனையாலும், கடந்த காலப் பொருளோட்ட அறவீடுகளால் வந்த பணம் ரூபா 1,35,200/- மிகுதி சங்கத்தின் மாதாந்த லாபத்தில் ஒதுக்கப்பட்ட பணங்களாலும் பெறப்பட்டது.

13) சங்கத்தின் எதிர்காலத்திற்குரிய அபிவிருத்தித் திட்டங்கள் :-

1. புதிய லொறி ஒன்று கொள்முதல் செய்தல்.
2. தீவுப்பகுதியின் தண்ணீர் விநியோகத்திற்காக வாகனத்துடன் கூடிய பௌசர் கொள்முதல் செய்தல்.
3. பார்மஸி ஒன்று திறத்தல்.
4 இரும்பு நிலையம் திறத்தல்.
5. விறகுகாலை திறத்தல்.

# வாழ்த்துகிறோம்! வாழ்க!

பிரதேச சமூக பொருளாதார வளர்ச்சிக்கும் எழுச்சிக்கும் தனிமனிதனின் மலர்ச்சிக்கும் கருவூலமாய் இருப்பது கூட்டுறவு இயக்கமே.

சமூக நீதி வழங்கி தொழிற் பிரச்சினைகளை மாற்றியமைத்து எல்லா நலன்களும் பெற வழிவகுத்து தனது அறவொழுக்கப் பணியில் தவறாது பொருளாதார அபிவிருத்திச் செயற்பாட்டில் சிறப்புற வாழ்த்துகின்றோம.

1. வேலணை உ. அ. அ. பிரிவு சனசமூக நிலையங்களின் ஒன்றியம்.
2. ஐயனார் ச. ச. நிலையம் வேலணை தெற்கு.
3. நேத்தாஜி ச. ச. நிலையம் வேலணை கிழக்கு.
4. செட்டி புலம் ச. ச. நிலையம் வேலணை கிழக்கு.
5. ஸ்ரீ முருகன் ச. ச. நிலையம் வேலணை மேற்கு.
6. பள்ளம் புலம் ச. ச. நிலையம் வேலணை வடக்கு.
7. திருவள்ளுவர் ச. ச. நிலையம் வேலணை மேற்கு.
8. பாரதி ச. ச. நிலையம் வேலணை மேற்கு.
9. கலைமகள் ச. ச. நிலையம் வேலணை கிழக்கு,
10. ஐக்கிய உதயமால் ச. ச. நிலையம் வேலணை கிழக்கு.
11. கவியரசு ச ச. நிலையம் வேலணை வடக்கு,
12. ஸ்ரீ முருகன் ச. ச. நிலையம் வேலணை மேற்கு.
13. நாவலர் ச. ச. நிலையம் வேலணை மேற்கு.
14. தாளியம் புலம் ச. ச. நிலையம் வேலணை கிழக்கு.
15. விநாயகர் ச. ச. நிலையம் வேலணை மண்கும்பான்.
16. வள்ளுவர் ச. ச. நிலையம் மண்டைதீவு.
17. மதியொளி ச. ச. நிலையம் மண்டைதீவு.
18. உதயசூரியன் ச. ச. நிலையம் மண்டை தீவு.
19. அல்லைபபிட்டி ச, ச. நிலையம் அல்லைப்பிட்டி.
20. வாசிகர் ச. ச. நிலையம் அல்லைப்பிட்டி.
21. அறிவகம் ச. ச. நிலையம் அல்லைப்பிட்டி.
22. சென் பிலிப்ஸ் ச. ச. நிலையம் அல்லைப்பிட்டி.

## சங்கக்...

(10 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தையும் வளர்த்தெடுக்க வேண்டிய கூட்டுறவையும், வல்லமையையும் எனக்கும், எனது நெறியாளர்கட்கும் இறைவன் அருள வேண்டும் எனப் பிரார்த்திப்பதுடன் இக்கட்டிடம் இன்றைவரை நிறைவெய்தியதற்கு 1977 இல் இருந்து உறுதுணையாக இருந்த பொதுமுகாமையாளருக்கும், சங்கப்பணியாளர்கட்கும், திணைக்கள அதிகாரிகட்கும் மற்றும் கூட்டுறவாளர்கட்கும் நன்றி கூறி சங்கம் மேன்மேலும் வளர வாழ்த்தி விடைபெறுகிறேன்.

நன்றி

திரு. பொ. நடராசா,
தலைவர்.
வேலணை ப.நோ. கூ. சங்கம்.

## கூட்டுறவு...

(9ஆம் பக்கத் தொடர்ச்சி)

பரீட்சித்து கூட்டுறவாளர்க்கு ஒரு முன்மாதிரியாக இருந்தார். ''மனிதகுலம் தனது வாழ்வுத் தேவைகள் முழுவதையும் நிறைவேற்றக் கூட்டுறவுக் கொள்கைகள் காட்டும் வழியைப் பின்பற்றி நன்மை பெற முடியும்'' என்றும், அப்படிப்பின்பற்றுவது தனிமனித நலம், சமூக நலம் இரண்டுக்கும் நன்மை தரும் என்றும், இக் கொள்கைகளின் வழிகாட்டலால் சமூக ஏற்றத்தாழ்வு, சுரண்டல், அற்ற பொதுநல சமூக அமைப்பை தோற்றுவிக்கலாம் என்றும் ஓவன் கருதியதோடு அதற்கேற்ப செயல்படவும் செய்தார்.

இவ் அடிப்படையில் கூட்டுறவின் இலக்கு மனித குலத்தின் அமைதியான சுபீட்சம் நிறைந்த வாழ்வுக்குத் தடையாக இருக்கும் சகல தடைகளையும் நீக்கி, பரஸ்பர உதவிகள் மூலம் அறவழி சார்ந்த சமூக, பொருளாதார, கலாசார அபிவிருத்தியை ஏற்படுத்தி, அமைதியான முற்போக்கு சமுதாயத்தை உருவாக்க முன் வந்தது. முதலாளித்துவ நோக்கிலுள்ள ஜனநாயகப் பண்பைப் பேணியவாறே பொதுவுடைமை நோக்கின் இறுக்கமான அரசுடைமைக் கொள்கையையும் தவிர்த்தவாறே தம்மியல்பான கூட்டுமுறையால் அதன் இலட்சிய நிறைவேற்றத்தைக் காண்பதற்கான மாற்று முறையே கூட்டுறவு ஆகும். ''முதலாளித்துவ அமைப்பில் கூட்டுறவு ஒன்றுதான் நல்ல அமைப்பு. அதை எப்பாடுபட்டாவது நாம் கட்டிக் காக்க வேண்டும்'' என்ற லெனினின் கூற்றை மாறிவரும் இன்றைய உலக அரசியல் சூழலில் நாம் இனங்கண்டு பொருத்திப் பார்ப்பது அவசியம்: முதலாளித்துவ பொருளாதார அரசியல் முறைமையும், சோஷலிச பொருளாதார அரசியல் முறைமையும் பரிசிலனைக்குட்பட்டுவரும் இன்றைய சூழலில் இரு முகாம்களும் சந்திக்கும் சமுதாயப்பாலமாக கூட்டுறவு அமைப்பு விளங்கலாம்.

போட்டிப் பொருளாதார அமைப்பில் இருந்தும் மாறுபட்டு சுய உதவி, பரஸ்பர உதவி, சிக்கனம் ஆகியவற்றைக் கொண்டு அமைக்கும் புதுமைப் பொருளாதார வழியாகவும், உன்னதமான வாழ்க்கைமுறையாகவும் கூட்டுறவு அமைப்பு விளங்குவதை உலக நாடுகள் உணர்ந்துள்ளன. இந்த இலட்சியங்களை எய்தும் பொருட்டு கூட்டுறவில் முயலும் மக்களின் அமைப்புகளுக்கு அவ்வந்நாட்டு அரசுகள் நடுவராக நின்று ஒத்திசைவை ஏற்படுத்தும் நிறுவனமாகவும் செயல் படவேண்டும். வருமானத்தைத்திரட்டும் நோக்கோடு மட்டுமல்லாமல் புறக்கணிக்கப்பட்ட பெரும்பாலான மக்களை ஒன்று திரட்டி நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் உண்மையான வலுவுள்ள சக்தியாக அவர்களை ஆக்குவதே நோக்கமாக இருத்தல் வேண்டும்.

கூட்டுறவு அமைப்பு என்பதன் பொருள், அங்கீகரிக்கப்பட்ட அமைப்பு மட்டும்தான் என்பதல்ல. பாதிக்கப்பட்ட எமது மக்கள் தமது பல்வேறு புனர்வாழ்வு நடவடிக்கைகளுக்குக்கூட சுய உதவிக் கூட்டுறவு அமைப்புகளைத் தோற்றுவிக்கலாம். பல்வேறு நிறுவனங்களையும் பங்காளராகவும் வென்றெடுக்கலாம். புதிய நெருக்கடிகள் புதிய கூட்டுறவு முறையைத் தோற்றுவிக்கலாம் அல்லவா?

# சிறப்பு மலர்

## ஆசிச் செய்தி...

(11ஆம் பக்கத் தொடர்ச்சி)

இக்கட்டிடம் எழுப்பப்பட்டு அதன் மேல்மாடி இச் சங்கக் காரியாலயத்திற்குஎன வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளது.

இத்தினத்தில் இம் மாதிரியிலான ஒரு கூட்டுறவுக் கைங்கரியம் நிறைவேறுவதற்கு ஒத்துழைப்பு நல்கிய அங்கத்தவர்கள், இயக்குனர் சபை உறுப்பினர்கள், பொதுமக்கள், சங்கப் பணியாளர்கள், இதர நிறுவனங்கள் யாவற்றுக்கும் நல்லாசி வழங்குவது சாலப் பொருத்தமுடையதாகும்.

வேலணை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் மேலும் சிறந்த சேவையை ஆற்றி யாழ் மாவட்டத்தில் ஒரு சிறந்த சங்கமாக மிளிர்வதற்கு எனது நல்லாசிகளை தெரிவிக்கின்றேன்.

செ. லிங்கநாதன்
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்
(கணக்காய்வு)
யாழ்ப்பாணம்.

## இரு நூறு...

(5ஆம் பக்கத் தொடர்ச்சி)

படைப்புநிலை, பிரசுரநிலை, விநியோகநிலை என்ற மூன்று நிலைகளில் எடுத்துக் கூறினார். 'படைப்பு நிலை' யில் இன்றைய எழுத்தாளனுக்கு மன அச்சங்கள் அதிகம். எனவே அவன் விவரணங்களைக் கூட மனச்சாட்சிக்கு மாறாக மாற்றியும், புதுக்கியும், திருத்தியும், திரிபுபடுத்தியும் எழுதுகிறான்போல் படுகிறது. நவீன இலக்கிய வளர்ச்சி பற்றிய முயற்சிகள் ஏறக்குறைய அறுபது வருடங்களைக் கொண்டதாயினும் பிரசுர நிலையில் இன்னமும் சராசரி ஆயிரம் பிரதிகளையே நூல்களும், சஞ்சிகைகளும் கொண்டிருக்கின்றன. அதிலும் இருநூறு பிரதிகள் உள்ளுராட்சியினர் பெறுவது மிகப் பெரிய, அதிர்ஷ்டமாக எழுத்தாளர்களால் மெய்சிலிர்த்து, புல்லரித்துப் பேசப்படுவது கூட ஒரு பிரச்சினைதான். இந்தக் கூட்டத்தில்கூட இலக்கியம் பற்றிப் பேசமுற்படாது, பிரதிகள் கொள்வனவு பற்றிய அதிகம் அலட்டிக் கொள்ளப்பட்டமை, இலக்கியத்தைவிட விற்பனைபற்றியே எழுத்தாளர்கள் அதிகம் கவலைப்படுவது புரிகிறது. இது தவறான மயக்கம். சரியாக எமது பிரச்சினையை அவதானித்தால் நூல்கள் விற்பனையாகாது போவதில்லை. விற்ற புத்தகங்களின் பணத்தை புத்தக விற்பனையாளர்கள் நூலாசிரியர்களுக்கோ, வெளியீட்டாளர்களுக்கோ சரிவரக் கொடுக்காததினால் ஏற்படும் பின்னடைவு, இதற்குச் சரியான தீர்வையெடுக்க வேண்டிய எழுத்தாளர்கள் வேறு வித லாபங்கள் கருதி புத்தக விற்பனையாளர்களுடன் நெருங்கிய தொடர்பு கொள்வதால், வாய்மூடி மௌனிகளாக இருப்பதால், இலக்கிய வளர்ச்சி தடைப்படுகிறது. இருநூறு பிரதிகள் கொள்வனவு நிகழப்போவதால் இலக்கிய வளர்ச்சி பூரணத்துவம் பெற்றுவிடாது; சாதனை படைத்து விடாது தமது எழுத்தையுமே எழுத்தாளர்கள் தம்மையும் முற்று முழுதாக நம்ப வேண்டுமே ஒழிய, வேறு நிர்வாக — அதிகார அமைப்புகளை நம்பியிருந்தால், அந்த அமைப்புகளின் தேவைகளுக்கும், விருப்பத்திற்கும் ஏற்ப எழுத நேரிட்டுவிடும். சிலசமயம் இன்னதைத்தான் எழுது என்று நேரடியாகவோ, மறைமுகமாகவோ கூறவும், புத்திசொல்லவும் தொடங்கிவிடுவார்கள். இது சத்திய எழுத்தினைப் பாதிக்கும் எனவும் பேசியமை' அவையில் பலத்த சலசலப்பை ஏற்படுத்தியது.

இதனால் கொதித்தெழுந்த பேராசிரியர் சண்முகதாஸ் 'இப்படியெல்லாம் இப்படிப்பட்ட கூட்டங்களில் பேசக் கூடாது. எழுத்தாளர்களைக் கொச்சைப்படுத்தக் கூடாது. விவரணங்களை பிழையாக டானியல் எழுதியிருக்கிறாரா?' — என்று டானியலைத் தேவையில்லாமல் இழுத்து செம்பியன் செல்வனுக்குச் சவால் விட்டார். சபைக்கே திகைப்பாகப் போய்விட்டது டானியலைவிட, மற்றவர்கள் பிழையான தகவல்களைக் கொடுக்கிறார்கள் என்று கூறுகிறாரா? டானியல் - விவரணம் - பேராசிரியர் என்ற இலக்கியத் தொடர்புஎன்ன? இதைத்தான் பேசவேண்டும் என்று கட்டளையிடுகிறாரா?

அந்த நேரத்தில் டொமினிக் ஜீவா சபையிலிருந்தபடியே பலமாகத் தலையையும் கைகளையும் ஆட்டியாட்டி தலைவரை உற்சாகப்படுத்திக் கொண்டிருந்த தன்மையைக் கண்டு, எல்லாரும் வியப்புடன் பார்த்தனர்.

இதன்பிறகாவது யாராவது இலக்கியப் பிரச்சினையாக செம்பியனின் பேச்சை வெட்டியோ, ஒட்டியோ பேசுவார்களென்று பார்த்தால் — உகும்......... எல்லாம் செக்கு மாட்டின் பாதைதான். ஆனால், ஒருவராவது செம்பியனின் நாமத்தை அர்ச்சிக்காமல் போகவில்லை. ஆனால், செம்பியனுக்குப் பதில்சொல்ல வந்தவர் உள்ளுராட்சி உதவி ஆணையாளர்தான். அவர் தனது 'நிர்வாகப் பிரச்சினைகளினூடும் எப்படி இந்தக் கண்காட்சியை நடத்தினேன் ...... எழுத்தாளர் ...... கலைஞர்களை ஒன்று கூட்டினேன். இம்முயற்சியைப் பலப்படுத்த வாசகர் வட்டத்தை ஏற்படுத்தி வருகிறேன் ......... நிர்வாக அமைப்புகள் ஒருபோதும் எழுத்தாளர்களின் சிந்தனையைக் கட்டுப்படுத்தாது என விளக்கம் கூறினார்.

அன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஈழத்தில் கலை வளர்ச்சி என்ற பொருளில் பேராசிரியர் வி. சிவசாமியின் தலைமையில், கலாநிதி சோ. கிருஷ்ணராஜா (நுண்கலைகள்), கலாநிதி சி.மௌனகுரு (நாடகக்கலை), கலாநிதி இ. பாலசுந்தரம் (கிராமியக் கலைகள்), திரு. அந்தனி ஜீவா (மலையகக் கலைகள்) ஆகியோர் பங்குபற்றினர்.

பலரின் வேண்டுகோளும், பெருமுயற்சிகளும் சேர்ந்து முப்பதாம் திகதியும் கண்காட்சி நீடிக்கப்பட்டமையால், சில கல்லூரி, பாடசாலை மாணவர்கள் கண்காட்சியைப் பார்க்க ஏதுவாயிருந்தது. □

## இந்திய...

(8ஆம் பக்கத் தொடர்ச்சி)

அங்கம் வகிக்கின்றன. அத்துடன் தென்னாட்டில் இரு கம்யூனிஸ்ட் கட்சிகளுடனும்,மேற்கு வங்காளத்தில் மார்க்ஸிஸ்ட் கொம்யூனிஸ்ட் கட்சியுடனும் போட்டி தவிர்ப்பு ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதில் தேசிய முன்னணியின் தலைமை தீவிரமாகச் செயற்பட்டு வருகிறது. இந்நிலையில் வட இந்தியாவில் ஹிந்தி பேசும் மாநிலங்களில் தேசிய முன்னணியும் பாரதிய ஜனதாக் கட்சியும் போட்டி தவிர்பு ஒப்பந்தங்களுக்கு இணங்கியுள்ளன.

இந்திரா கொங்கிரஸ் 509 வேட்பாளர்களை நிறுத்தியுள்ளது. 19தொகுதிகளைத் தனது சகபாடிகளுக்கு வழங்கியுள்ளது. தேசிய முன்னணி 315 வேட்பாளர்களையும், பாரதிய ஜனதாக் கட்சி 205 வேட்பாளர்களையும் தொகுதிகளில் நிறுத்தியுள்ளன.

சுதந்திரம் அடைந்தது முதல் ஆட்சி செய்த கொங்கிரஸ் கட்சி ஒரு முறைதான் மண் கவ்வியது. அதுவும், இடையீடாக $2\frac{1}{2}$ ஆண்டுகள் நீடித்த ஜனதாக் கட்சியின் ஆட்சி வந்த வேகத்தில் காற்றடித்த மேகம் போல் கரைந்து விட்டது.

கொங்கிரஸில் ஏற்பட்ட விரிசலுக்குப் பிறகு 1984 தேர்தலில், இந்திரா கொங்கிரஸ் 542 ஆசனங்களில் அதிகப் பெரும்பான்மையான 415 ஆசனங்களைக் கைப்பற்றி ஆட்சியை அமைத்துக் கொண்டது. தேர்தல் அலையில் வெற்றியை ஈட்டிய போதிலும் சராசரி 40% வாக்குகளைத்தான் இ. கொங்கிரஸால்பெற முடிந்தது. நடந்து முடிந்த தேர்தல்களில் இ. கொங்கிரஸால் 50% அதிகமான வாக்குகளைப் பெற முடியவில்லையாம். இதனால் நேரடி மோதலில் தாம் ஜெயிக்க முடியுமென்று தேசிய முன்னணி முடிவு கட்டியுள்ளதாகத் தெரிகிறது.

உத்தரப் பிரதேசம் இந்தியாவின் அரசியலில் ஒரு குருசேத்திரம். 1977 ஆம் ஆண்

(2ஆம் பக்கம் பார்க்க)

திசை
THISAI

# ஜே. வி. பி. ஓரடி பின்னே அரசு பல அடி முன்னே

ஜே. வி. பியின் பெண்கள் அமைப்புத்தலைவி கைது செய்யப்பட்டுள்ளதாகவும், அதன் இரகசிய வானொலி நிலையம் கைப்பற்றப்பட்டுள்ளதாகவும் அரசு அறிவித்துள்ளது.

ஜே. வி. பி. யின் உயர்மட்டத் தலைவர்களான றோஹண விஜயவீர, உபதிஸ்ஸகமனாயக்கா, எஸ். பி. ஹேரத் உட்படப் பலர் கைதுசெய்யப்பட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அவ்வியக்கம் திகைத்து நிற்கும் சூழலில், இயக்கத்தின் முதுகெலும்பையே முற்றாக நொருக்கும் நோக்குடன், அரசு பெரும் இரகசிய வேட்டையில் ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.

எந்த ஒரு நாட்டிலும் புரட்சியோ, அல்லது எதிர்ப்புரட்சியோ நிகழும்போது வெளிப்படையாக ஏற்படும் மரணங்களைவிட, அதன் பின்பு திரைமறைவில் ஏற்படும் மரணங்களின் தொகை மிகப்பலமடங்காக இருப்பதுண்டு. பல ஆண்டுகளின் பின்புதான் இத்தகைய புள்ளி விபரங்கள் ஓரளவு தெரியவருவதுண்டு.

1971 ஆம் ஆண்டு ஏப்பிரில் கிளர்ச்சியை அடக்கியபோது 200 பேர் வரைதான் கொல்லப்பட்டதாக, அரசு உத்தியோகபூர்வமாக அறிவித்த போதிலும் பின்பு உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் 14,000 பேர்வரை மாண்டதாகக் கூறியது.

எதிரி ஓரடி பின்னே வைக்கும்போது நீ பல அடி முன்னே வைத்தால், அவன் முற்றாக ஓடுவான் என்ற மாஓவின் இராணுவத் தந்திரோபாயத்தை அரச இராணுவம் பின்பற்றுகிறதோ என்று, எண்ணத் தோன்றுகிறது.

## இசைமுகம்

*"சுதந்திர ஒளியினில் மனங்குளி*
*அதன்வழி திசையெலாம் துலங்கவே"*

### ஜே. வி. பி. யின் எதிர்காலம்

இலங்கை வரலாற்றில் காலத்துக்குக் காலம், சிங்கள இனம் தனது தேசிய உணர்வை மறக்காமல் இருப்பதற்கான எழுச்சியூட்டல்கள் நிகழ்ந்தவண்ணமே இருந்துள்ளன.

வரலாற்றுக்காலத்தில் துட்டகைமுனு இத்தகைய சிங்கள இனத்தின் எழுச்சியூட்டலுக்குரிய ஒருவனாக இருந்துள்ளான். அண்மைக் காலத்தில் எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா அத்தகைய ஒரு எழுச்சியூட்டலின் கருவியாகவே வந்து சென்றுள்ளார்.

இத்தகைய ஒரு பின்னணி ஓட்டத்தின் மிக அண்மைக் காலப் பிரதிபலிப்பாகவே றோஹண விஜயவீர வருகிறார். 1956 இல் பதவிக்கு வந்த பண்டாரநாயக்கா, ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக சிங்கள மொழியை, அவர் தம் மதத்தை முதன்மைப்படுத்தினார். அவருக்குக் கிடைத்த ஆதரவு பெருமளவில், கிராமிய மட்டங்களைத் தழுவிய ஆசிரியர்கள், கிராம சேவகர்கள், நாட்டு வைத்தியர்கள் போன்றவர்களிடமிருந்தே வந்தது.

ஜே. வி. பிக்குக் கிடைத்த ஆதரவும் இத்தகையதே. அவரது இயக்கத்தின் பெருமபான்மையான இளைஞர்கள் கிராம மட்டத்திலிருந்தே வந்தவர்கள். கூடவே அதிகப்படியான மக்கள் செல்வாக்கும் அங்கிருந்தே வந்துள்ளது. றோஹண விஜயவீர தனது இயக்கத்துக்கு என்னதான் மார்க்ஸீய புரட்சிகர சுலோகங்களை ஒட்டினாலும் அது நிச்சயமாக மார்க்ஸீயனுது முறைகளைக் கடைப்பிடிக்கவில்லை என்றும், அது அண்மைக்காலங்களில் படைகளுக்கெதிராகவும் மக்களுக்கெதிராகவும் அவிழ்த்து விட்ட வன்முறைகளும் பொருளாதார அழிப்பு வேலைகளும மார்க்ஸீய வழிமுறைகளுக்கு பிழையானவை என்றும் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. அப்படியானால் ஜே. வி. பி. என்பது, ருஹுணுவில் தோன்றிய — துட்டகைமுனுவுடையதைப் போல் — பண்டாரநாயக்காவால் பாவிக்கப்பட்ட, சிங்களத் தேசிய உணர்வின் (Chauvinistic) காலத்துக்கேற்ற விரிவாக்கமே.

பண்டாரநாயக்கா ஆயுதத்தைப் பாவிக்கவில்லை. விஜயவீர ஆயுதத்தைப் பாவித்தார். ஆனால் ஆயுதத்தைப் பாவிக்காத பண்டாரநாயக்கா, பேரினவாதத்தை ஆயுதமாகப் பாவித்தார். அதனால்தான் 1958 இனக்கலவரத்தை உடனேயே அடக்காது "தமிழர்கள் சுவைக்கட்டும்" (Let them taste it) என்று விடடுவைத்தார். விஜயவீர, இந்திய விரிவாதிக்கத்தைச் சொல்லி அதையே தன் ஊன்று கோலாக வைத்திருந்தாலும், தனது வன்முறைகளைத் தமிழர்களுக்கெதிராகப் பாவிக்கவில்லை என்பது முக்கியம்.

இன்று விஜயவீர இல்லாத ஜே. வி பி. ஜனநாயக வழிக்குத் திரும்புமா? அல்லது விஜயவீர விட்டுவந்த பீக்கிங் கொம்யூனிஸ்ட் கடசிபோல் பிளவுபட்டு நிற்குமா?

## நடேசய்யர் நினைவு தினமும் நூல் ஆய்வுரையும்

எதிர்வரும் 23.11 89 வியாழன் மாலை 3.30 மணியளவில் யாழ். பல்கலைக்கழக செல்வநாயகம் மண்டபத்தில் திரு ஏ. ஜே. கனகரத்தினா தலைமையில், கோ. நடேசய்யர் அவர்களை நினைவு கூரும் முகமாக கூட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் கலாநிதி வி. நித்தியானந்தன் அவர்கள் சிறப்புரை ஆற்றுவார்.

நடேசய்யர் பற்றி 'சாரல் நாடன்' எழுதிய 'தேசபக்தன் கோ. நடேசய்யர்' என்னும் நூல் பற்றி இக்கூட்டத்தில் திருமதி சித்திரலேகா மௌனகுரு அவர்கள் ஆய்வுரை வழங்குவார்.

## வரவு...

(1ஆம் பக்கத்தொடர்ச்சி)

* 36,000 ரூபா வருட வருமானம் பெறுவோருக்கு வருமான வரி விதிப்பு.

* ஜனவரியிலிருந்து தபாற் கட்டண அதிகரிப்பு. சாதாரண தபால், அஞ்சலட்டைக் கட்டணங்கள் 25 சதத்தால் அதிகரிப்பு. பதிவுக் கட்டணம் 2 ரூபாவால் அதிகரிப்பு.

## பல்கலைக்கழகத்தில் கருத்தரங்கு

காலஞ்சென்ற கலாநிதி திருமதி ரஜனி திரணகமவின் 60வது நாள் அனுட்டானத்தை ஒட்டி, இம்மாதம் 20ஆம் திகதியும் 21 ஆம் திகதியும் யாழ். பல்கலைக்கழகத்தில் கருத்தரங்குகளும் நினைவாஞ்சலிக் கூட்டமும் நடைபெறவிருக்கின்றன. நினைவாஞ்சலிக்குழுவே இதற்கு ஒழுங்கு செய்திருக்கின்றது.

20ஆம் திகதி கருத்தரங்குகள் காலை 9 மணிக்குத் தொடங்கி இரவு 7 மணிக்கு முடிவுறும்.

இவற்றில் பங்குபற்றுவோர் திரு ரெஜி சிறிவர்தன, மார்டின் எனல்ஸ் (சர்வதேச விழிப்புச் சபையின் பிரதம செயலாளர்), ஆபிரிக்க சுதந்திரப் போராட்டத்தில் முன்னணி வகித்த அ. ஆர். எம். பாபு, செல்விகள் லிஸ்பிலிப்சன், பெரியதம்பி, சுனிலா அபயசேகர, ஹகட் சயிற் கான்.

நினைவாஞ்சலிக் கூட்டம் 21 ஆம் திகதி பிற்பகல் 1 மணிக்கு நடைபெறும். உரைகள் தமிழில் மொழிபெயர்க்கப்படுவதற்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

பொது மக்களை இந்நிகழ்ச்சிகளில் பங்குபற்றுமாறு, நினைவாஞ்சலிக்குழு அழைப்பு விடுத்துள்ளது.

## பரிதாப நிலைக்கு விஜயவீரவே பொறுப்பு

**- ஜனாதிபதி**

பயங்கரவாதத்தையும், வன்முறையையும் ஒழிக்கும் முயற்சிகளுக்கு உதவும்படி, சங்கங்களையும் கட்சிகளையும் குழுவினரையும் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸ கோரியுள்ளார்.

றோஹண விஜயவீரவுக்கு ஏற்பட்ட பரிதாபகரமான நிலைக்கு அவரே பொறுப்பு எனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, அவர் தமது கோரிக்கைக்குச் செவிமடுத்திருந்தால் நாட்டுக்கும், மக்களுக்கும், ஏற்பட்ட அழிவுகளைத் தவிர்த்திருக்கலாம் எனவும் குறிப்பிட்டார்.

## ஆட்கொணர்வு மனுவின் நிலை:
## மரணப்படை மக்களின் உரிமையை மறுக்கிறது

படையினரால் கைதுசெய்யப்படும் சந்தேக நபர்களை விசாரணைக்குக் கொண்டுவருவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்திற்கு மனு தாக்கல் செய்யப்படுவதற்கு இருந்த உரிமை, இப்பொழுது பெயரளவில மட்டுமே இருப்பதாக அது சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இதற்குக் காரணம், இத்தகைய வழக்குகளுக்காக வாதாடிய மனித உரிமைகள் இயக்கச் சட்டத்தரணிகள் சிலர், இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டதே என, அவர் மேலும் கூறியுள்ளார். இதனால் இன்று ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்படுவது மிகவும் குறைந்துள்ளது. அத்தோடு தாக்கல் செய்யப்பட்ட முறையீடுகளை, மேன்முறையீட்டு நீதிமன்றம் விசாரணைக்கெடுத்த வேளைகளில், சந்தேக நபர்களைக் கைதுசெய்ததாகச் சொல்லப்படுபவர்கள் அவர்களைத் தாம் கைதுசெய்யவில்லை என, மறுத்துள்ளார்கள். இதனால் இவ் விசாரணைகள் நீதிமன்றத்திற்குப் பாரப்படுத்தப்பட்டு, அங்கும் இதே நிலையே தொடர்ந்ததால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் வேறுவழியின்றி, தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

இத்தனைக்கும் எமது அரசியல் யாப்பின் 141ஆவது சரத்துப்படி, சந்தேக நபர்களை நீதிமன்றத்திற்குக் கொண்டுவரவும்; அவர்களுக்கெதிராக நடவடிக்கை எடுக்கவோ அல்லது அவர்களை விடுதலை செய்யவோ அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## மேல்மாடி திறப்பு விழா

புதிதாகக் கட்டப்பட்ட வேலணை ப.நோ.கூ. சங்கத்தின் தலைமை அலுவலக மேல்மாடிக் கட்டிடம், எதிர்வரும் 18.11.89 சனிக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்குத் திறந்து வைக்கப்படும்.

**DIPLOMA IN COMPUTER PROGRAMMING
&
DATA PROCESSING**

BASIC
d. Base III+
LOTUS 1, 2, 3
WORD PROCESSING

Commencing from: 20 - 11 - 89

C I M A. (Stages 1 & 2) I. D. P. M. (Parts 1 & 2)
I. A. B. (All Stages), A. A. T. (All Stages)
Short Hand & Typing

Commencing from: 2 - 12 - 89

**SCHOOL OF BUSINESS ADMINISTRATION**
(LEADERS IN COMPUTER EDUCATION)
16, 3rd Cross Street,
(West of OLR Church)
JAFFNA.

இபபத்திரிகை, இல. 118, 4ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணத்திலுள்ள நியூஈரா பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தால் 17-11-1989இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பட்டது
Registered as a newspaper at the General Post Office, Sri Lanka, Under Q. J. 78/89.